
Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

THURSDAY, FEBRUARY 17,

வியாழக்கிழமை பெப்ரவரி 17, 2022 | ஒளி: 07 கதிர் 234 | பக்கம்:10 | வடக்கு,கிழக்கு | Free

## இன்று மாசி மஹோற்சவம்

மாத்தளை ஸ்ரீ முத்துமாரியம்மனின் மாசி மஹோற்சவம், இன்று (17) நடைபெறும்.

முழுச் செய்தி P9

## வடக்கு, கிழக்கில் 20ஆம் திகதி போராட்டத்துக்கு அழைப்பு

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் சங்கம் எதிர்வரும் 20ஆம் திகதி மாபெரும் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளது. அதற்கு ஒத்துழைப்பு நல்குமாறு அச்சங்கம் அழைப்பு விடுத்துள்ளது.

கிளிநொச்சி வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கத் தலைவி யோகராசா கனகரஞ்சினி, அதற்கான அழைப்பை, நேற்று (16) நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின் ஊடாக விடுத்தார்.

"வடக்கு, கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் தொடர் போராட்டத்தை ஆரம்பித்து, எதிர்வரும் 20ஆம் திகதி ஐந்து ஆண்டுகள் நிறைவடைகின்றன என்று தெரிவித்த அவர், இலங்கை அரசாங்கத்திடமிருந்து தீர்வு கிடைக்காத நிலையில், சர்வதேசத்திடம் நீதி கேட்டு நாங்கள் போராடி வருகின்றோம்.

இந்த நிலையில் குறித்த நாளன்று மாபெரும் பேரணியை மேற்கொள்வதற்கு நாங்கள் திட்டமிட்டுள்ளோம். அன்றைய தினம், கடந்த காலங்களில் நாங்கள் போராட்டங்களை மேற்கொள்கின்றபொழுது வடக்கு, கிழக்கில் இருக்கின்ற அனைத்துத் தரப்பினரும் ஒத்துழைப்புகளை நல்க வேண்டுமென அழைத்தார்.

தற்பொழுது உயர்தரப் பரீட்சைகள் இடம்பெற்று வரும் நிலையில், குறித்த போராட்டத்துக்கான அழைப்பானது, பொருத்தமானதாக இருக்குமா என அவரிடம் வினவியபொழுது, "மாணவ செல்வங்களுக்கு எவ்வித இடையூறுகளும் இல்லாது அமைதி வழியாக குறித்த போராட்டத்தை தாங்கள் முன்னெடுப்போம்" என்றார்.

## மரணத்துக்கு பின்னரான பீசிஆர் கட்டாயமில்லை



அனைத்து மரணங்களுக்கும் மரணத்துக்குப் பின்னரான பீசிஆர் பரிசோதனை செய்வது கட்டாயமில்லை என, சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் டொக்டர் அசேல குணவர்தன தெரிவித்தார்.

மேற்குறிப்பிட்ட பணிப்புரை உடனடியான அமலுக்கு வரும் என்று பணிப்பாளர் நாயகத்தால், நேற்று (16) வெளியிடப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2



ஈஸ்டர் தாக்குதல் விவகாரம்

## சஹ்ரானின் மனைவியிடம் 6 மணிநேரம் வாக்குமூலம்


2019 ஏப்ரல் 21ஆம் திகதி உயிர்த்த ஞாயிறு தினத்தன்று நடத்தப்பட்ட தற்கொலைத் தாக்குதல்களின் பிரதான சூத்திரதாரியென அறியப்பட்ட, அவ்வியக்கத்தின் தலைவரும் தற்கொலைதாரியுமான சஹ்ரான் ஹாசிமினின் மனைவியிடம் 6 மணிநேரம் வாக்குமூலம் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

தற்போதைய அரசியல்வாதிகளுக்கு

# இளைஞர்கள் சாபமிடுவர்

- **நாட்டில் எஞ்சியுள்ள ஒரே தேசிய வளம் இளைஞர்களே என்கிறார் ரணில்**
- **நடுத்தர வர்க்கம் இன்னல்களை எதிர்நோக்குவதுடன் பொருளாதார ஏணியில் இருந்து கீழே தள்ளிவிடப்படுகிறது**
- **அடிப்படைக் கோட்பாடுகள் குறித்தும் ஒருமித்த கருத்துக்கு வர முடியுமா என்று பார்ப்போம். இது எங்கள் கடமை**



நாட்டில் எஞ்சியிருக்கும் ஒரே தேசிய வளம், இலங்கையின் இளைஞர்கள் என்று தெரிவித்த முன்னாள் பிரதமரும் ஐக்கிய தேசிய கட்சியின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க எம்.பி, நாட்டின் எதிர்காலத்தை உருவாக்கும் கடமையை நிறைவேற்றாவிட்டால் அரசியல்வாதிகளுக்கு இளைஞர்கள் சாபமிடுவார்கள் என்றும் தெரிவித்தார். இளைஞர்கள் நம்பிக்கையை இழக்கும் முன்னர், அவர்களைப் பற்றி நாம் சிந்திக்க வேண்டும். அவர்களுக்கு பாராளுமன்றத்தின் மீதிருந்த நம்பிக்கையை அரசாங்கம் உடைத்துள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நேற்று (16) அவர் வெளியிட்டுள்ள விசேட அறிக்கையிலேயே மேற்குறிப்பிட்ட விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது. அதில் மேலும் குறிப்பிடப்பட்டிருந்ததாவது,

தொடர்ச்சி P2

தடுப்பூசி செலுத்திக்கொண்டால்

## பிறக்கும் குழந்தைகளுக்கு கொரோனாவில் இருந்து பாதுகாப்பு

தடுப்பூசி செலுத்திக்கொண்ட பெண்களுக்கு பிறக்கும் குழந்தைகளுக்கு கொரோனா தொற்றில் இருந்து அதிக பாதுகாப்பு கிடைக்கிறது என ஆய்வில் தெரியவந்துள்ளது. அமெரிக்காவின் நோய் கட்டுப்பாடு மற்றும் தடுப்பு மையத்தின் புதிய ஆய்வில் தெரிவிக்கப்பட்டு இருப்பதாவது,

தொடர்ச்சி P2

கொரோனா பாணி மருந்து

## தம்மிக்கவின் தம்பி கொரோனாவுக்கு பலி



கொரோனா நோய்க்கான பாணி மருந்தை அறிமுகப்படுத்தியதற்காக அதிகம் பேசப்பட்ட நபரான தம்மிக்க பண்டாரவின் இளைய சகோதரர், கொரேனா தடுப்பூசியின் மூன்று டோஸ்களையும் பெற்ற போதிலும், கொரோனா நிமோனியாவால் உயிரிழந்துள்ளார்.

தொடர்ச்சி P2

தேர்தல்கள் ஆணைக்குழுவால்

## 2 சின்னங்கள் நீக்கம்

அரசியல் கட்சிகளுக்கு ஒதுக்கப்படாத சின்னங்களின் பட்டியலில் இருந்து இரண்டு சின்னங்களை நீக்குவதற்கான அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலை தேர்தல்கள் ஆணைக்குழு வெளியிட்டுள்ளது.

கிரீடம், விவசாயி ஆகிய சின்னங்களே மேற்படி பட்டியலில் இருந்து நீக்கப்பட்டுள்ளன.

தொடர்ச்சி P2



படல்கம சிறுவன் மரணம்

## எந்த மதமானாலும் புரிதல் வேண்டும்

**பொலிஸ் பேச்சாளர் அறிவிப்பு**



மக்கள் எந்த மதத்தைப் பின்பற்றினாலும், சரி எது பிழை எது என்பதைத் தெரிவு செய்யும் அறிவும் புரிதலும் அவர்களுக்கு இருக்க வேண்டும் என, பொலிஸ் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## தயாசிறியின் குற்றச்சாட்டுக்கு இ.மி.ச பொறியியலாளர்கள் பதிலடி



அதிகாரவர்க்கத்தால் 40 மெகாவோட் புதுப்பிக்கத்தக்க சக்தி இழக்கப்பட்டுள்ளதாக இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர முன்வைத்த குற்றச்சாட்டுக்கு இலங்கை மின்சார சபையின் பொறியியலாளர்கள் சங்கத்தினர், நேற்று (16) பதிலளித்துள்ளனர்.

தொடர்ச்சி P2

## கொரோனா மரணங்கள் 17 சதவீதம் அதிகரிப்பு

**ஒட்சிசன் தேவைப்படும் நோயாளிகளும் உயர்வு**

கொரோனா மரணங்களின் எண்ணிக்கை நூற்றுக்கு 17 சதவீதம் அதிகரித்துள்ளது என்று தெரிவித்த சுகாதார அமைச்சின் தொழில்நுட்ப சேவைகள் பணிப்பாளர் டொக்டர் அன்வர் ஹம்தானி, நாளொன்றுக்கு 30 பேர் கொரோனா தொற்றால் மரணமடைவதாகவும் சுட்டிக்காட்டினார்.

தொடர்ச்சி P2

## குளத்தில் மூழ்கி 2 சிறுமிகள் மரணம்

குருநாகல், வதுராகல அகரகனே குளத்தில் நீராடச் சென்ற 13, 14 வயதுடைய இரண்டு சிறுமிகள் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர் என்று குருநாகல் பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்விருவரும் வேஹேர பண்டாரநாயக்க வித்தியாலயத்தில் கல்வி பயிலும் மாணவிகளாவர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

தொடர்ச்சி P2

சா/தரத்துக்கான விண்ணப்ப

## அவகாசம் இன்றுடன் முடிகிறது



2021 (2022) க.பொ.த சாதாரண தர பரீட்சைக்கு தோற்ற விரும்பும் பரீட்சார்த்திகளின் விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்வதற்கான கால அவகாசம் இன்றுடன் (17) முடிவடைவதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் எல்.எம். டி. தர்மசேன தெரிவித்தார்.

முன்னதாக, பெப்ரவரி 3, 10 ஆம் திகதிகளில் இரண்டு முறை காலக்கெடு நீட்டிக்கப்பட்டிருந்த நிலையில், இன்றுடன் (17) வழங்கப்பட்ட கால அவகாசம் நிறைவடைகிறது. பரீட்சைகள் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளமான www. doenets.lk அல்லது திணைக்களத்தின் உத்தியோகபூர்வ திறன்பேசி செயலியான DoE க்குச் சென்று விண்ணப்பத்தை ஒன்லைனில் சமர்ப்பிக்கும் முன் உரிய வழிமுறைகளை கவனமாக வாசிக்குமாறு பரீட்சார்த்திகளை அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

## இரண்டு பிள்ளைகளின் தாய் சுட்டுக்கொலை

மத்துகம பகுதியில் நடத்தப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் இரண்டு பிள்ளைகளின் தாயொருவர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸ் ஊடகப்பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

நேற்று முன்தினம் (15) இரவு 9 மணியளவில் இந்தத் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளதாகவும் சம்பவம் இடம்பெற்ற போது கணவரும் பிள்ளைகளும் வீட்டில் இருந்துள்ளனர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

வீட்டிற்குள் நுழைந்த இருவர், பெண் மீது துப்பாக்கிப் பிரயோகம் நடத்திவிட்டு தப்பிச்சென்றுள்ளதாகத் தெரிவித்த பொலிஸார், இரண்டு பிள்ளைகளின் தாயான 37 வயதான பெண்ணே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார் என்றும் தெரிவித்தனர்.

ரி 56 ரக துப்பாக்கியின் 6 ரவைகள், சம்பவ இடத்திலிருந்து கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸ்

தொடர்ச்சி P2





**கையிருப்பு உள்ளதாக கூட்டுத்தாபனம் தெரிவிப்பு**

மட்டுப்படுத்தப்பட்ட விநியோகத்தால்

## எரிபொருள் தட்டுப்பாடு

நாடு முழுவதுமுள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கான விநியோகம் பாதியாகக் குறைக்கப்பட்டுள்ளதால், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக, கூட்டுத்தாபனத்தில் தேசிய சேவையாளர் சங்கத்தின் செயலாளர் ஆனந்த பாலித, நேற்று (16) தெரிவித்தார்.

இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர், இந்திய எண்ணெய் நிறுவனத்திடமிருந்து இருந்து 40,000 மெற்றிக் தொன் எரிபொருளை எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பிலவிடம் நேற்றுமுன்தினம் (15) கையளித்தார்.

நாட்டின் நாளாந்த எரிபொருள் தேவை 6,000 மெற்றிக் தொன் என்றும் பெறப்பட்ட 40,000 மெற்றிக் தொன் எரிபொருள் எட்டு நாள்களுக்கு மட்டுமே போதுமானது என்றும் பாலித தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்



## சஹ்ரானின் மனைவியிடம் 6 மணிநேரம் வாக்குமூலம்

வெலிக்கடை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள சஹரானின் மனைவியிடம் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் அதிகாரிகளால் இந்த வாக்குமூலம் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

குளியாப்பிட்ட நீதவான் நீதிமன்றம் அண்மையில் வழங்கிய கட்டளையின் பிரகாரம், நேற்று முன்தினம் (15) சிறைச்சாலைக்குச் சென்ற அதிகாரிகளால் வாக்குமூலம் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## 2 சின்னங்கள் நீக்கம்

இரண்டு சின்னங்களும் அரசியல் கட்சிகளுக்கு ஒதுக்கப்படவில்லை என்ற அடிப்படையின் கீழ் பட்டியலில் சேர்க்கப்பட்டு ஜனவரியில் வெளியிடப்பட்ட வர்த்தமானியில் சேர்க்கப்பட்டிருந்தன.

இந்த வருடம் ஜனவரி மாதம் வெளியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானியில், பாராளுமன்றத் தேர்தல் சட்டத்தின் நோக்கங்களுக்காக அரசியல் கட்சிகளுக்கு ஒதுக்கப்பட்ட சின்னங்கள் மற்றும் அரசியல் கட்சிகளுக்கு ஒதுக்கப்படாத சின்னங்களின் பட்டியலை தேர்தல்கள் ஆணைக்குழு வெளியிட்டிருந்தது.

இரண்டு சின்னங்களும் தேசிய சின்னங்களுக்கு ஒத்ததாக இருப்பதால்

> **எதிர்காலத்தில் நாட்டின் எந்த அரசியல் கட்சியும் அதை பயன்படுத்த அனுமதிக்கப்படமாட்டாது என்றும் ஆணைக்குழு அறிவித்துள்ளது.**

பட்டியலில் இருந்து நீக்கப்பட்டதாக ஆணைக்குழுவின் சிரேஷ்ட அதிகாரியொருவர் தெரிவித்தார்.

இதன்காரணமாக, ஓர் அரசியல் கட்சிக்கு அவை சின்னமாக ஒதுக்கப்படக் கூடாது என்றும், எதிர்காலத்தில் நாட்டின் எந்த அரசியல் கட்சியும் அதை பயன்படுத்த அனுமதிக்கப்பட மாட்டாது என்றும் ஆணைக்குழு கருதுவதாக அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

## கொரோனா மரணங்கள் 17 சதவீதம் அதிகரிப்பு

ஒட்சிசன் தேவைப்படும் நோயாளிகளின் எண்ணிக்கையிலும் அவசர சிகிச்சைப் பிரிவுகளில் சிகிச்சைப் பெறும் கொரோனா தொற்றாளர்களின் எணிக்கையிலும் கணிசமான அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அதற்கிணங்க, ஒட்சிசன் தேவைப்படும் நோயாளிகளின் எண்ணிக்கை 12 சதவீதத்தாலும், அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெறும் நோயாளர்கள் எணிக்கை 3 சதவீதத்தாலும் அதிகரித்துள்ளதாகக் குறிப்பிட்டார்.

நாளொன்றுக்கு 30 பேர் கொரோனாவால் மரணிக்கின்றனர் எனத் தெரிவித்த அவர், அவ்வாறு மரணமடைவோரில் நூற்றுக்கு 60 க்கும் 65 சதவீதத்துக்கும் இடைப்பட்டவர்கள் பூஸ்டர் தடுப்பூசியை ஏற்றிக்கொள்ளாதவர்கள் என்றும் தெரிவித்தார்.

இதேவேளை, கொழும்பு தேசிய வைத்தியசாலையில்

> **தொழிலுக்கு அல்லது வெளிநாடுகளுக்கு செல்வதற்காக தடுப்பூசிகளை பெற்றுக்கொள்ள வேண்டும்**

அனுமதிக்கப்படும் கொரோனா நோயாளிகளில் பெரும்பாலானவர்கள் முறையாக தடுப்பூசி செலுத்திக் கொள்ளாதவர்கள் என வைத்தியசாலையின் பிரதி பணிப்பாளர் வைத்தியர் சந்தன கஜநாயக்க தெரிவித்தார்.

அவர்களில் பெரும்பாலான நோயாளர்கள் நடுத்தர வயதுடையவர்கள் என்பதுடன், தீவிர சிகிச்சை தேவைப்படுபவர்கள் என்றும் அவர் குறிப்பிட்டார்.

தொழிலுக்கு அல்லது வெளிநாடுகளுக்கு செல்வதற்காக தடுப்பூசிகளை பெற்றுக்கொள்ள வேண்டும் என எண்ணாமல், தத்தமது உயிரை பாதுகாப்பதை முதன்மை நோக்காகக் கொண்டு பூஸ்டர் தடுப்பூசியை பெற்றுக்கொள்ளுமாறு பொதுமக்களிடம் கோரியுள்ளார்.

# இளைஞர்கள் சாபமிடுவர்

பொருளாதாரம் இன்னும் மோசமடைந்து வருகிறது எனவும் டொலர் மற்றும் ரூபாய் பற்றாக்குறை இன்றும் தீர்க்கப்படவில்லை எனவும் குறிப்பிட்டார்.

ஒரு டொலருக்கான ரூபாயின் உண்மையான மதிப்பு இன்று ரூ. 250 எனவும் அது ரூ. 275 ரூபாயாக அதிகரிக்கக்கூடும் என்றும் அதோடு நிறுத்தவில்லை என்றால், வருட முடிவுக்குள் 300 ரூபாயாகும் என்றும் தெரிவித்தார்.


மேலும், நடுத்தர வர்க்க சமூகம் இன்னல்களை எதிர்நோக்கி வருவதாகவும், பொருளாதார ஏணியில் இருந்து கீழே தள்ளப்படுவதாகவும் தெரிவித்த அவர், விவசாயத் துறை அழிந்துவிட்டது எனவும் சிறு மற்றும் பெரு வணிகர்கள் தங்கள் வேலையைச் செய்ய பொருட்களை வாங்க முடியவில்லை என்றும் சுட்டிக்காட்டினர்.

ஜூன், ஜூலை மாதங்களுக்குள் 6 பில்லியன் அமெரிக்க டொலர்கள் வெளிநாட்டுக் கடனை மீண்டும் செலுத்த வேண்டியிருக்கும் எனவும் சர்வதேச நாணய நிதியத்துடன் நாங்கள் இன்னும் நிலைமை குறித்து விவாதிக்கவில்லை எனவும் குறிப்பிட்டார்.

சர்வதேச நாணய நிதியத்தின் அரசியலமைப்பின் 4 வது பிரிவின் கீழ், ஒவ்வொரு உறுப்பு நாடும் ஆண்டுக்கு ஒரு முறை அதன் பொருளாதார நிலை குறித்து கலந்துரையாடி அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் எனவும் சர்வதேச நாணய நிதியக் குழு கடந்த டிசெம்பர் மாதம் இலங்கை வந்தடைந்தாகவும் அதற்கமைய. அடுத்த வாரம் அறிக்கை சமர்ப்பிக்கப்படும் என அறியமுடிவதாக தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டதும் அறிக்கையில் முன்வைக்கப்பட்ட முன்மொழிவுகள் விவாதிக்கப்பட வேண்டும் எனவும் அதிலிருந்து அடிப்படைக் கோட்பாடுகள் குறித்தும் ஒருமித்த கருத்துக்கு வர முடியுமா என்று பார்ப்போம். இது எங்கள் கடமை என்று தெரிவித்துள்ளார்.

எதிர்காலத்துக்கான ஒரு திட்டத்தை நாம் வைத்திருக்க வேண்டும் எனவும் நமக்கு ஒரு குறுகிய கால திட்டமும் தேவை, அதே போல் இதை முன்னோக்கி



> **நீண்ட கால மற்றும் குறுகிய காலத் திட்டம் செயல்படுத்தப்பட வேண்டும் என்றும், ஒரு திட்டம் நிறைவேற 15 ஆண்டுகள் செல்லும் என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

கொண்டு செல்ல நடுத்தர மற்றும் நீண்ட கால திட்டங்கள் தேவை. இந்தத் திட்டங்களைச் செயல்படுத்த உதவும் பொருளாதாரக் கட்டமைப்பை நாங்கள் கொண்டிருக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

நீண்ட கால மற்றும் குறுகிய காலத் திட்டம் செயல்படுத்தப்பட வேண்டும் என்றும், ஒரு திட்டம் நிறைவேற 15 ஆண்டுகள் செல்லும் என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## எந்த மதமானாலும் புரிதல் வேண்டும்

படல்கமயில் 10 வயது சிறுவனின் அண்மையில் மரணமடைந்தமை தொடர்பில், நேற்றையதினம் (16) ஊடகவியலாளர்களிடம் கருத்துத் தெரிவிக்கும் போதே மேற்குறிப்பிட்ட விடயத்தை அவர் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கையில் மக்கள் தாங்கள் விரும்பும் எந்த மதத்தையும் பின்பற்றும் சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளது. ஆனால், ஒரு மதத்துக்குள்ளேயே எது சரி எது பிழை என்பதைத் தெரிவுசெய்யும் அறிவும் புரிதலும் மக்களுக்கு இருக்க வேண்டும் என்றார்.

நம்பிக்கை மற்றும் மத நம்பிக்கையின் மூலம் நோயுற்றவர்களைக் குணப்படுத்துவதாகக் கூறும் பலர் உள்ளனர் எனவும் இதைப் புரிந்து கொள்ளும் ஒரு பெரியவருக்கு சுதந்திரமான விருப்பத்துடன் செய்தால், அது அவர்களைப் பொறுத்தது என்றும் சுட்டிக்காட்டினார்.

அதேவேளை, குறிப்பிட்ட இந்த சம்பவத்தில், கவனக்குறைவால் சிறுவன் உயிரிழந்துள்ளான் எனவும் அவன் உயிரிழந்த பின்னரும் அவர்கள் அமைதியாக இருந்தமையே பிழை என்றும் குறிப்பிட்டார்.
சிறுவன் மீண்டும் உயிர்த்தெழுவான் என்று குடும்பத்தினர் நம்பியமையால் தான் அவர்கள் மரணத்தை 3 நாட்கள் இரகசியமாக வைத்திருந்தனர் எனவும் அது தொடர்பான விசாரணை இன்னும் இடம்பெற்று வருவதாகவும் தெரிவித்தார்.

படல்கம பிரதேசத்தில் 10 வயதுச் சிறுவன் ஒருவன் உயிரிழந்ததையடுத்து, வீட்டில் இருந்து துர்நாற்றம் வீசியதால் சந்தேகமடைந்த அயலவர்கள் பொலிஸாருக்கு தகவல் வழங்கினர்.

சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்ட சிறுவனின் தாய், தந்தை மற்றும் பாட்டி ஆகியோரில் தந்தையும் பாட்டியும் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளதுடன், தாயார் தொடர்பில் மனநல அறிக்கையை சமர்ப்பிக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மரணத்துக்கு பின்னரான பிசிஆர் கட்டாயமில்லை

அந்தந்த சுகாதார அதிகாரிகளுக்கு சுற்றறிக்கையை வெளியிட்ட அவர், வைத்தியசாலைகளிலோ அல்லது வீட்டிலோ மரணிப்பவர்களுக்கு பீசிஆர் பரிசோதனை கட்டாயமில்லை என்று குறிப்பிட்டுள்ளார்.

இருப்பினும், மரணமடைந்த ஒருவருரின் பிரேத பரிசோதனையின் போது பிசிஆர் பரிசோதனை மேற்கொள்ளப்படவேண்டும் என குறிப்பிட்ட சட்ட வைத்திய அதிகாரி விரும்பினால் பரிசோதனை செய்யப்படலாம் என்றும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கொரோனா தொற்று காரணமாக மரணம் ஏற்பட்டால், மறு அறிவித்தல் விடுக்கப்படும் வரும் வரை முந்தைய சுற்றறிக்கை தொடர்ந்தும் அமுல்படுத்தப்படும் எனவும் பணிப்பாளர் நாயகம் குறிப்பிட்டுள்ளார்.

## பிறக்கும் குழந்தைகளுக்கு கொரோனாவில் இருந்து பாதுகாப்பு

கர்ப்ப காலத்தில் கொரோனா வைரசுக்கு எதிராக முழுமையாக தடுப்பூசி செலுத்திக்கொண்ட பெண்களுக்கு பிறக்கும் குழந்தைகள், கடுமையான கொரோனா தொற்றால் வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுவது 60 சதவீதம் குறைவாக உள்ளது.

தடுப்பூசி செலுத்திக் கொண்ட பெண்களுக்கு பிறக்கும் குழந்தைகளுக்கு வலுவான பாதுகாப்பு கிடைக்கிறது.

கடந்த ஆண்டு ஜூலை முதல் இந்த ஆண்டு ஜனவரி வரை 20 குழந்தை மருத்துவ மையங்களில் அனுமதிக்கப்பட்ட 6 மாதங்கள் வரையிலான 379 குழந்தையிடம் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது".

இது குறித்து ஆராய்ச்சியாளர் டெல்மேன் கூறும்போது,

'தடுப்பூசி செலுத்திக்கொண்ட தாய்மார்களுக்கு பிறந்த 6 மாதங்களுக்கு குறைவான குழந்தைகள் கொரோனாவால் அனுமதிக்கப்படுவது 61 சதவீதம் குறைவாக இருந்தது.

கொரோனாவால் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட குழந்தைகளில் 84 சதவீதம் பேர் கர்ப்ப காலத்தில் தடுப்பூசி போடாதவர்களுக்கு பிறந்தவர்கள். தடுப்பூசி போடாத தாய்க்கு பிறந்த ஒரு குழந்தை இறந்தது.

இளம் குழந்தைகளை பாதுகாக்க தாய் வழி தடுப்பூசி மிகவும் முக்கியமான வழியாகும். தாய் மற்றும் குழந்தை பாதுகாப்பிற்காக கர்ப்ப காலத்தில் எந்த நிலையிலும் தடுப்பூசி போடுவது முக்கியம்" என அவர் கூறினார்.

## தம்மிக்கவின் தமையன் கொரோனாவுக்கு பலி

உயிரிழந்தவர் கேகாலை ஹெட்டிமுல்ல பகுதியைச் சேர்ந்த 58 வயதுடையவர் என கேகாலை பொலிஸார் தெரிவித்தனர்.

மூன்று பிள்ளைகளின் தந்தையான இவர், புற்றுநோயால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் கடந்த பெப்ரவரி மாதம் 12ஆம் திகதி வீட்டில் உயிரிழந்துள்ளார்.

கேகாலை வைத்தியசாலையில் நடத்தப்பட்ட ரபிட் அன்டிஜென் பரிசோதனையைத் தொடர்ந்து அவர், கொரோனா தொற்றுக்கு உள்ளாகியிருந்தமை கண்டறியப்பட்டுள்ளது.

## தயாசிறியின் குற்றச்சாட்டுக்கு இ.மி.ச பொறியியலாளர்கள் பதிலடி

நியாயமான தொழில்நுட்ப பிரச்சினைகளே தாமதத்துக்கு காரணம் என்று இலங்கை மின்சார சபையின் மின்சார பொறியியலாளர்கள் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

உயர் மின்னழுத்தம் உள்ளிட்ட தொழில்நுட்ப பிரச்சினைகள் மற்றும் சம்பந்தப்பட்ட வீடு மற்றும் சுற்றுப்புற வீடுகளை பாதிக்கும் எனவும் மின்சாதனப் பொருட்கள் அதிக வெப்பமடைதல், மின்மாற்றி அளவுகள் மாறுதல், மின்சாரம் வழங்குவதில் சிக்கல்கள் ஆகியவை அடங்கும் என சங்கம் தெரிவித்துள்ளது.

இதுபோன்ற அனைத்து பிரச்சினைகளுக்கும் சபையே பொறுப்பேற்க வேண்டும் என்பதுடன், மேலும் பல நடைமுறை சிக்கல்கள் உள்ளதாகவும் சங்கம் குறிப்பிட்டுள்ளது.

நாட்டின் டொலர் கையிருப்பு மற்றும் எரிபொருள் வளங்களை காப்பாற்றுவதற்கு சூரிய சக்தியை வழங்குவதை மின்சாரசபை விரும்புவதாகவும் பல பிரச்னைகளுக்கு இன்றுவரை தீர்வு கிடைக்கவில்லை என்றும் சங்கம் தெரிவித்துள்ளது.

## இரண்டு பிள்ளைகளின் தாய் சுட்டுக்கொலை

ஊடகப்பேச்சாளர் குறிப்பிட்டார்.
முதற்கட்ட விசாரணைகளை மத்துகம நீதவான் மேற்கொண்ட பின்னர், பெண்ணின் சடலம் நாகொட வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதாவும் மேலதிக விசாரணைகளை மத்துகம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர் எனவும் தெரிவித்தார்.

## குளத்தில் மூழ்கி 2 சிறுமிகள் மரணம்

நேற்றுமுன்தினம் (15) இடம்பெற் இச்சம்பவத்தில் நீரில் மூழ்கிய நான்கு பாடசாலை மாணவிகளை பிரதேசவாசிகள் காப்பாற்றியுள்ளனர்.

மூன்று சிறுமிகள் ஆபத்தான நிலையில் குருநாகல் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டபோது, அவர்களில் இருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தசவர்களின் சடலம் குருநாகல் போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்த குருநாகல் பொலிஸார், சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# எரிபொருள் தட்டுப்பாடு



எட்டு நாட்களுக்குள் அடுத்த எரிபொருள் தொகுதி வரவில்லை என்றால், நாட்டில் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படும் என்று குறிப்பிட்ட அவர், நாட்டில் எரிபொருள் தட்டுப்பாடு இல்லாமல் சீராக விநியோகிக்கப்படுவதை உறுதிசெய்ய அடுத்த மூன்று நாட்களுக்குள் அடுத்த தொகுதி வந்து சேர வேண்டும் என்றார்.
இதன் காரணமாகவே நாட்டில் எரிபொருள் விநியோகம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது எனவும் சில நிரப்பு நிலையங்கள் எரிபொருளைக் கோரியபோதும் விநியோகத்தைப் பெற இரண்டு முதல் மூன்று வாரங்கள் காத்திருக்கின்றன.
ஒவ்வொரு நிரப்பு நிலையத்திலிருந்தும் 3 கிலோ மீற்றர் தூரத்தில் கூட்டுத்தாபனத்தின் 1,350 நிரப்பு நிலையங்கள் நாடு முழுவதும் நிறுவப்பட்டுள்ளன.
எனினும், நாட்டில் போதிய எரிபொருள் கைவசம் இருப்பதாகவும், ஆனால் அது மின்சார உற்பத்திக்காக விநியோகிக்கப்பட்டால் போக்குவரத்து துறைக்கு போதுமானதாக இருக்காது என்றும் அமைச்சர் கம்மன்பில சுட்டிக்காட்டியிருந்தார்.
இதேவேளை, போதுமானளவு எரிபொருள் கையிருப்பிலுள்ளதாகவும் மக்கள் வரிசையில் நின்று எரிபொருளை கொள்வனவு செய்ய வேண்டியதில்லை என கூட்டுத்தாபனத்தின் தலைவர், சட்டத்தரணி சுமித் விஜேசிங்க தெரிவித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

### தேசிய பாதுகாப்பு பற்றிக் கதைப்பதற்கு

# அரசாங்கத்துக்கு அருகதையில்லை

சண்டித்தனம் காட்டி, நாட்டு மக்களை அச்சுறுத்தி, மக்களைக் கட்டுப்படுத்த நினைக்கும் அரசியல்வாதிகள் பலர் நாட்டில் இருக்கின்றனர் எனத் தெரிவிக்கும் எதிர்க்கட்சி எம்.பி பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா, இதுபோன்ற அரசியல்வாதிகளும் அவர்களுக்குப் பின்னால் இருப்பவர்களும் ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதல்களின் பின்னணியில் இருக்கிறார்கள்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர், ஊடகவியலாளர் சமுதித, சுயாதீனமாகச் செயற்பாட்டார். இதனால் பாதிக்கப்பட்ட பலரே, அவரின் வீடு மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் பின்னணியில் இருக்கிறார்கள். அரசாங்கத்தின் தலையீடுகள் இத்தாக்குதல் சம்பவத்தில் இருந்தாலும் இல்லை என்றாலும், ஊடகவியலாளர்கள் மீதான இதுபோன்ற தாக்குதலுக்கு அரசாங்கம் பொறுப்புக்கூற வேண்டும்.

சண்டித்தனம் காட்டி, நாட்டு மக்களை அச்சுறுத்தி, மக்களைக் கட்டுப்படுத்த நினைப்பவர்கள் நாட்டில் இருக்கிறார்கள். இதுபோன்ற அரசியல்வாதிகளும் அவர்களுக்குப் பின்னால் இருப்பவர்களும் இதுபோன்ற தாக்குதலின் பின்னணியில் இருக்கிறார்கள்.

தாக்குதல்தாரிகளை அரசாங்கம் கண்டுபிடிக்கவில்லை என்றால் தேசிய பாதுகாப்பு தொடர்பில் கதைப்பதற்கு அரசாங்கத்துக்கு எந்தவிதமான தகுதிகளும் இல்லை.

சமுதிதவுடன் நான் உரையாடியிருந்தேன். நாட்டில் திறமையான பொலிஸார் இருக்கிறார்கள். அவர்களால் இதனை நிச்சயமாகக் கண்டுபிடிக்க முடியும். பொலிஸாருக்கு தேவையான அதிகாரத்தை வழங்குவதற்கு அரசாங்கம் ஒத்துழைக்க வேண்டும் எனவும் கேட்டுகொண்டார்.

## தேர்தலுக்கு எந்நேரமும் தயார்

நாட்டு மக்களின் பணத்தில் அரசாங்கம் அரசியல் பேரணிகளை நடத்துவதாகத் தெரிவித்த ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் பந்துலால் பண்டாரிகொட, தேர்தலுக்கு எந்நேரமும் தாம் தயாராக இருக்கிறோம் எனவும் தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர், அரசாங்கம் என்கிற வகையில் இத்தனை காலமாக அரசியல் செய்யவில்லை என அரசாங்கம் கூறுகிறது. அரசாங்கம் எந்த அரசியலைச் செய்தாலும் அதில் எமக்குப் பிரச்சினை இல்லை. ஆனால், நாட்டு மக்களின் வரிப்பணத்தில் இயங்கும் அரசாங்கம், தங்களது அரசியல் பேரணிகளுக்கும் அரசியல் பேரணிகளுக்கு வருவோருக்கு பொருட்களை வழங்குவதற்கும் பொதுமக்களின் பணத்தைப் பயன்படுத்தக்கூடாது.

நாட்டு மக்கள் வியர்வையை சிந்தி உழைத்தப் பணத்தை, தங்களது அரசியல் பேரணிகளுக்குப் பயன்படுத்தி, மக்களின் கண்களை மூடுவதை ஒருபக்கம் வைத்துவிட்டு, தேர்தலை நடத்த வேண்டும் எனவும் வலியுறுத்தினார்.

அரசாங்கம் எந்தநேரத்தில் தேர்தலை வைத்தாலும், தேர்தலுக்கு முகங்கொடுக்க ஐக்கிய மக்கள் சக்தி தயாராகவே இருக்கிறது. அரசாங்கத்தின் பேரணியா, அரசாங்கத்துக்கு எதிரான பேரணியா வெற்றிபெறும் என்பது, தேர்தலை நடத்தினால் தெரியவரும் எனவும் அவர் கூறினார்.



## தர்ம உபதேசம்...

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் எண்ணக்கருவுக்கு அமைய அனைத்து பௌர்ணமி தினங்களிலும் நடத்தப்படும் 'அமாதம் சிசிலச' தர்ம உபதேசத் தொடரின் 219ஆவது தர்ம உபதேசம் அலரி மாளிகையில் நேற்று (16) நடைபெற்றது.





### டெங்கு காய்ச்சலால்

## ஜனவரியில் 985 பேர் பாதிப்பு

டெங்கு காய்ச்சலால், 2022 ஜனவரி மாதம் மட்டும் 985 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என சுகாதார அமைச்சின் தொற்று நோய் விஞ்ஞான பகுதி அறிவித்துள்ளது. இதில், ஆகக் கூடுதலாக கொழும்பு மாவட்டத்தில் 245 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கம்பஹா, களுத்துறை, அநுராதபுரம், பொலன்னறுவை, மொனராகலை, இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களில் ஒருவரேனும் பாதிக்கப்படவில்லை.

பெப்ரவரி மாதத்தில் இதுவரையிலான காலப்பகுதியில் மட்டும் நால்வர் இனங்காணப்பட்டுள்ளனர். அதிலிருவர் கல்முனையிலும் மற்றைய இருவரும் மட்டக்களப்பிலும் இனங்காணப்பட்டுள்ளனர்.

அதனடிப்படையில், நமது நாட்டில் இவ்வாண்டில் இதுவரையிலான காலப்பகுதியில் 989 பேர் டெங்கு காய்ச்சலால் இனங்காணப்பட்டுள்ளனர்.

### வளங்கள் தொடர்ந்து விற்கப்படுவதை

## சுதந்திரக் கட்சி கடுமையாக எதிர்க்கும்



நாட்டின் வளங்கள் பாரதூரமான முறையில் விற்பனை செய்யப்பட்டு வருவதாகத் தெரிவிக்கும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உபதவிசாளர் பேராசிரியர் ரோஹண லக்ஷ்மன் பியதாஸ, நாட்டின் வளங்கள் தொடர்ந்து விற்பனை செய்யப்படுவதை தாம் கடுமையாக எதிர்ப்பதாகவும் தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர், சர்வதேச நாடுகள், இலங்கை மீது அழுத்தங்களைச் செலுத்த ஆரம்பித்துள்ளன. நாட்டின் பாரிய வளங்கள் வெளிநாடுகளுக்கு தொடர்ந்தும் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. குறிப்பாக, சில பெறுமதியான வளங்கள் விற்பனை செய்யப்பட்டு வருவதோடு, சில முக்கிய கட்டடங்கள் வெளிநாடுகளுக்கு குத்தகைக்கு வழங்கப்படுகின்றன.

நாட்டின் துறைமுக முனையங்களை வெளிநாடுகள் ஒவ்வொன்றும் பொறுப்பேற்றுக் கொண்டுள்ளன. கடற்கரைகள் கூட இவ்வாறு வழங்கப்படுகின்றன. நாட்டின் பெறுமதியான வளங்கள் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

நாட்டின் பிரதான மின் உற்பத்தி நிலையத்தை அமெரிக்காவுக்கு வழங்க அரசாங்கம் தயாராகி வருகிறது. இவற்றையெல்லாம் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி கடுமையாக எதிர்க்கின்றது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னர், நாட்டின் தேசிய பாதுகாப்பு தொடர்பில் பிரச்சினை எழுந்தன. ஈஸ்டர் தாக்குதல், அரசியல் நோக்கங்களுக்காக செய்யப்பட்டனவா எனத் தற்போது பலரும் பேச ஆரம்பித்துள்ளனர்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலை விசாரணை செய்த பல அதிகாரிகள், நாட்டை விட்டுச் சென்றுள்ளனர். பல சந்தேகநபர்களும் நாட்டை விட்டு தப்பியோடியுள்ளனர் எனவும் பேராசிரியர் ரோஹண லக்ஷ்மன் பியதாஸ தெரிவித்தார்.



### ஏழு மாகாணங்களில்

## 66 பாலங்களை புனரமைக்க நடவடிக்கை

குவைத் அரசாங்கத்தின் நிதி உதவியில், 07 மாகாணங்களை உள்ளடக்கிய 66 பாலங்களை புனரமைக்க நடவடிக்கை எடுக்கப்படுமென நெடுஞ்சாலைகள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார். இந்த 66 பாலங்களை புனரமைக்கும் திட்டத்துக்கு குவைத் அரசு நிதியுதவி வழங்குகிறது. இந்த 66 பாலங்களும் புனரமைக்கப்பட்டு 03 வருடங்களுக்குள் கட்டி முடிக்கப்பட உள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

தேசிய நெடுஞ்சாலைகளில் இருக்கும் பழைய பாலங்களுக்குப் பதிலாக புதிய பாலங்கள் கட்டுவதும், குறுகலான பாலங்களை விரிவுபடுத்துவதன் மூலம் பாலங்களை பயன்படுத்தும் பயணிகளின் பயண நேரத்தை குறைக்கவும் பயணிகளின் பாதுகாப்பை உறுதி செய்யவும் வாய்ப்பு ஏற்படுகிறது.

வெள்ளம், மண்சரிவு ஏற்பட்டால் நாடு பூராகவும் உள்ள வீதி வலையமைப்பிற்கு பாதுகாப்பான போக்குவரத்து வசதிகளை வழங்கும் வகையில் தற்காலிக பாலங்கள் அமைக்கப்படும் எனவும் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ மேலும் தெரிவித்தார்.

## கடற்றொழில் அமைச்சு அதிரடி அறிவிப்பு

இந்திய மீனவர்கள் இலங்கையின் கடல் எல்லைக்குள் அத்துமீறி கடற்றொழிலில் ஈடுபடுவதை தடுப்பதற்கு மேற்கொள்ள வேண்டிய அனைத்து நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படும் என கடற்றொழில் அமைச்சு அறிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பில் விரைவில் இந்திய அரசாங்கத்துடன் கலந்துரையாடுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக கடற்றொழில் அமைச்சின் செயலாளர் இந்து ரத்நாயக்க குறிப்பிட்டார்.

இந்திய அரசாங்கமும் கலந்துரையாடலுக்கான இணக்கத்தை தெரிவித்துள்ளதாக அவர் கூறினார்.

பாதுகாப்பு பிரிவினரால் கைப்பற்றப்பட்டுள்ள படகுகள் மற்றும் மீன்பிடி உபகரணங்கள் தொடர்பில் மேற்கொள்ள வேண்டிய அடுத்த கட்ட நடவடிக்கைகள் குறித்தும் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக கடற்றொழில் அமைச்சின் செயலாளர் தெரிவித்தார்.

## யானைக் குட்டி உயிரிழப்பு

ரஸீன் ரஸ்மின்

காலில் ஏற்பட்ட காயம் காரணமாக சிகிச்சையளிக்கப்பட்டு வந்த நான்கு அடி உயரமான யானைக் குட்டி (மூன்றரை வயது), சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளது. நிக்கவெரட்டிய வனவிலங்கு கால்நடை மருத்துவ பிரிவு தெரிவித்துள்ளது.

யானைக் குட்டியின் காலில் ஏற்பட்ட காயம் காரணமாக எழுந்து நடக்க முடியாத நிலையில், கல்கமுவ பகுதியிலுள்ள வயல்வெளியில் நேற்று முன்தினம் (15) மாலை பெரும் சிரமத்திற்கு முகங்கொடுத்திருந்தது.

வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளுக்கு பிரதேசவாசிகள், தகவல் வழங்கியதை அடுத்து, அங்கு சென்ற அதிகாரிகள் குறித்த யானக் குட்டிக்கு அந்த இடத்திலேயே முதலுதவி சிகிச்சை அளித்து, நிக்கவெரட்டிய வனவிலங்கு கால்நடை மருத்துவ பிரிவில் மேலதிக சிகிச்சையளிக்கப்பட்டது எனினும், பலனளிக்கவில்லை.

## விசாரணைகளுக்கு ஊடகவியலாளர் அழைப்பு



இந்தியாவின் திருப்பதி கோவிலுக்கு வழிபாடுகளுக்காக செல்வதற்குப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பயன்படுத்திய தனியாருக்கு சொந்தமான ஜெட் விமானம் தொடர்பில் ஊடகவியலாளர் தரிந்து உடுவரகொதர இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சாத்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்திருந்தார்.

இந்த முறைப்பாட்டை உறுதி செய்வதற்கான ஆவணங்களுடன், எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு ஆணைக்குழுவுக்கு வருமாறு குறித்த ஊடகவியலாளருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

திருப்பதி கோவிலுக்கு செல்வதற்குப் பிரதமர், தனியாருக்குச் சொந்தமான ஜெட் விமானத்தை பரிசாகப் பெற்றுக்கொண்டமை இலஞ்ச மற்றும் ஊழல் தொடர்பான சட்டத்தை மீறுவதாகுமென தெரிவித்து ஊடகவியலாளர் தரிந்து முறைப்பாடு செய்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## பேருவளையில் கோவில்; ஜேர்மன் நாட்டவர் உதவி

துசித டி சில்வா



ஜேர்மன் நாட்டவரின் 30 இலட்சம் ரூபாய் நிதி உதவியின் கீழ், பேருவளை கீரந்திடிய ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவிலை புனரமைப்பு செய்வதற்கான பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பேருவளை கீரந்திடிய ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவிலுக்கு சில மாதங்களுக்கு முன்பு வழிபாடுகளுக்காக வந்திருந்த ஜேர்மன் நாட்டவரான கோனி என்பவர், அக்கோவிலின் நிலைகண்டு, அதனை புனரமைத்துத் தருவதாக உறுதியளித்திருந்தார்.

இந்நிலையில் அக்கோவிலின் நிர்மாணப் பணிகளுக்காக முதற்கட்டமாக 30 இலட்சம் ரூபாயை ஜேர்மனியின் 'ஆயுபோவன் ஈவ்' அமைப்பு வழங்கியுள்ளது.

## இராணுவ வீரர்களுக்கு வீட்டுக் கடன் திட்டம்



இராணுவ வீரர்களுக்கான வீட்டுக் கடன் திட்டம் தொடர்பில் இராணுவத் தளபதி ஜெனரல் ஷவேந்திர சில்வாவுக்கும், மக்கள் வங்கியின் பொது முகாமையாளர் சுஜீவ ராஜபக்ஷ ஆகியோருக்கிடையில் ஒப்பந்தமொன்று கையெழுத்திடப்பட்டுள்ளது.

இராணுவ தளபதியின் எண்ணக்கருவுக்கமைவான இராணுவத்தின் முன் நகர்வுக்கான மூலோபாய திட்டமிடல் 2020 - 2025 இன் ஓர் அங்கமாக இக்கடன் திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளதாக இராணுவ ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த வீட்டுக் கடன் திட்டத்தின் கீழ், விண்ணப்பிக்கும் ஒருவர் ஆண்டுக்கு 9 சதவீத வட்டி என்றடிப்படையில் அதிகபட்சமாக 15 மில்லியன் ரூபாயைப் பெற்றுக்கொள்ள முடியும். வழங்கப்படும் மொத்த கடன் தொகையில் 75% கடன் தொகையை வீடு நிர்மாணிக்கப்படவுள்ள காணியின் பெறுமதி மற்றும் புதிய வீட்டை நிர்மாணிப்பதற்கான மதிப்பீடு என்பவற்றின் அடிப்படையில் பெற்றுகொள்ள முடியும்.

மாறாக, ஏற்கெனவே நிர்மாணிக்கப்பட்ட வீடொன்றைக் கொள்வனவு செய்வதற்கான விண்ணப்பதாரர் மதிப்பீட்டு தொகையில் 75% சதவீதத்தை கடனாக பெற்றுக்கொள்ள முடியும்.

விண்ணப்பதாரர் வீட்டு திட்ட தொகுதியின் ஒரு பகுதியைக் கொள்வனவு செய்வதாயின் அதன் பெறுமதியின் 60 சதவீதம் கடன் தொகையை பெற்றுகொள்ள முடியும். அதேபோல், குறித்த கடன் வசதிகளைப் பெற்றுக் கொள்ளும் நபர் சேவையிலிருந்து ஓய்வு பெற்ற காலத்திலிருந்து 70 வயது வரைக்கும் கடன் தொகையை மீண்டும் செலுத்த முடியும் என்பதோடு, குறித்த கடன் திட்டத்தின் கீழ் வீடுகளை நிர்மாணித்துக் கொள்வதற்காக இராணுவத்தின் ஆளணி வளமும் வழங்கப்பட உள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

## தேர்தலுக்கு எதிர்க்கட்சி தயாராக இருக்க வேண்டும்



தேர்தலை நடத்த வேண்டிய தினத்தில் அரசாங்கம் நடத்துமெனத் தெரிவிக்கும் இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க, எதிர்க்கட்சியினர் தேர்தலுக்கு தயாராக இருக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர், ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன பேரணிகள், மாநாடுகள் என்பவற்றைத் தற்போது முன்னெடுத்து வருகின்றது. இதனைப் பார்க்கும் எதிர்க்கட்சியினர் அரசாங்கம் தேர்தலுக்கு தயாராகி வருவதாகக் கூறுகிறார்கள்.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் இவ்வாறான செயற்பாடுகளை பார்க்கும் எதிர்க்கட்சியினர், விரைவில் தேர்தல் நடைபெறும் என நினைக்கிறார்கள். நாட்டில் தேர்தலை நடத்த வேண்டிய தினத்தில் நடத்துவோம்.

அவ்வாறான தேர்தல் ஒன்றுக்கு, எதிர்க்கட்சியினர் தயாராக இருப்பது நல்லது. காலவதியான எதிர்க்கட்சியுடன் தேர்தலில் போட்டியிடுவதற்குப் பதிலாக தேர்தலுக்கு எந்நேரமும் தயாராக இருக்கும் எதிர்க்கட்சியுடன் போட்டியிடுவதே சிறந்தது எனவும் தெரிவித்தார்.

## தட்டுப்பாடின்றி உரம் கிடைக்கும்



தட்டுப்பாடின்றி உரம் வழங்கப்படும் என ஜனாதிபதி தமக்கு அறிவித்துள்ளதாகத் தெரிவித்த அமைச்சர் எஸ்.எம்.சந்திரசேன, உரத்துக்காக விவசாயிகள் இனியும் போராட்டம் நடத்தவேண்டிய அவசியமில்லை என்றார்.

அடுத்த போகத்துக்குத் தேவையான உரத்தை, தட்டுப்பாடின்றி வழங்குவதாக ஜனாதிபதி அறிவித்துள்ளார். கடந்த காலங்களில் விவசாயிகள் வயல்களில் போராட்டங்களில் ஈடுபட்டனர்; பேரணிகளாகச் சென்றனர்; உருவப் பொம்மைகளை எரித்தனர். இது உண்மையில் கவலையளிக்கக்கூடிய விடயம். இதுபோன்ற சம்பவங்கள் எதிர்காலத்தில் நடைபெறாது எனவும் இதன்போது அமைச்சர் தெரிவித்தார்.


# ஒதியமலையில் யானை உயிரிழப்பு

## காணி உரிமையாளரான பெண் கைது

■ சண்முகம் தவசீலன், செ.கீதாஞ்சன்

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஒதியமலை கிராமத்தில், யானை ஒன்று மின்சாரவேலியில் சிக்கி நேற்று முன்தினம் (15) உயிரிழந்துள்ளது.

விவசாயத் தோட்டம் ஒன்றுக்குக் கட்டப்பட்ட மின்சார வேலியில் சிக்கி, காட்டு யானை உயிரிழந்துள்ளது. இச்சம்பவம் தொடர்பில் வனஜீவராசிகள் திணைக்களத்தினர் சம்பவ இடத்துக்குச் சென்று



பார்வையிட்டுள்ளதுடன் ஒட்டுசுட்டான் பொலிஸாரும் விசாரணை நடத்தியுள்ளார்கள்.

இதன்போது விவசாய தோட்டக் காணியின் உரிமையாளரான 46 வயதுடைய பெண் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதுடன் யானை உயிரிழப்பு தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றார்கள்.

மின்சார வேலியில் தும்பிக்கையைப் பிடித்தபடி யானை உயிரிழந்துள்ளது.

அருகில் உள்ள விவசாய நிலங்களை நாசம் செய்த காட்டுயானை, மின்சார வேலி அமைக்கப்பட்ட விவசாயப் பண்ணைக்குள் செல்லமுற்பட்டபோது மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளது.



தமிழரசுக் கட்சியின் வாலிபர் முன்னணியின் ஏற்பாட்டில்

# பயங்கரவாத தடைச் சட்டத்துக்கு எதிராக கையெழுத்து வேட்டை

■ எஸ். நிதர்ஷன், எம். றொசாந்த், டி. விஜித்தா

பயங்கரவாத தடைச் சட்டத்துக்கு எதிராக, கையெழுத்து திரட்டும் நடவடிக்கை, இலங்கை தமிழரசுக் கட்சியின் வாலிபர் முன்னணியின் ஏற்பாட்டில் நேற்று (16) யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றிருந்தது.

யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையத்துக்கு முன்பாக நேற்றுக் காலை 9 மணியளவில் இடம்பெற்ற கையெழுத்துப் போராட்டத்தில் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா கையெழுத்திட்டு ஆரம்பித்து வைத்தார்.

இதன்போது பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன், மாகாண சபை முன்னாள் உறுப்பினர்களான சுகிர்தன், ஆர்னோல்ட், சயந்தன் ஆகியோரும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் உள்ளூராட்சி சபைத் தவிசாளர்கள், உறுப்பினர்கள், யாழ்ப்பாணம் மாநகர சபைத் தலைவர் மணிவண்ணன் ஆதரவு உறுப்பினர்கள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள், பொது மக்களும் கலந்து கொண்டு கையெழுத்துகளைப் பதிவு செய்திருந்தனர்.

அரச பல்கலைக்கழக ஓய்வூதியர்களுக்கு

# அரசின் 5,000 ரூபாய் கொடுப்பனவு வழங்கப்படவில்லை

■ க. அகரன்

அரச பல்கலைக்கழகங்களில் பணியாற்றி ஓய்வு பெற்றவர்களுக்கு அரசின் அதிகரித்த 5,000 ரூபாய் கொடுப்பனவு வழங்கப்படவில்லை எனவும், 23 ஆண்டுகளாக எந்தவித ஓய்வூதிய அதிகரிப்புமின்றி இருப்பதாகவும் பல்கலைக்கழகங்களில் பணியாற்றி ஓய்வு பெற்றவர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்ளும் வகையில், அனைத்து அரச ஊழியர்கள், ஓய்வூதியம் பெறுவோர் ஆகியோருக்கு 5,000 ரூபாய் கொடுப்பனவு அதிகரிப்பு ஜனவரி மாதம் முதல் வழங்கப்பட்டதுடன், சமுர்த்தி பயனாளிகளுக்கும் அதிகரித்த கொடுப்பனவு வழங்கப்பட்டு வருகின்றது. தனியார் துறையினருக்கும் அதிகரித்த கொடுப்பனவை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், அரச பல்கலைக்கழகங்களில் கல்வி சார் மற்றும் கல்வி சாரா ஊழியர்களாகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர்களுக்கு, அரசாங்கத்தின் 5,000 ரூபாய் அதிகரிப்பு கொடுப்பனவு இதுவரை வழங்கப்படவில்லை. அத்துடன் அவர்கள் கடந்த 23 ஆண்டுகளாக ஓய்வூதியக் கொடுப்பனவு திட்டத்தில் எந்தவித அதிகரிப்பும், மறுசீரமைப்பும் இன்றி இருந்து வருகின்றனர்.

அவர்களது ஓய்வூதியம் தொடர்பான சுற்றறிக்கையில், மூன்று ஆண்டுகளுக்கு ஒரு தடவை ஓய்வூதிய மறுசீரமைப்பு இடம்பெறும் எனத் தெரிவிக்கப்பட்டபோதும் கடந்த 23 ஆண்டுகளாக இது தொடர்பில் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இதனால் பல்கலைக்கழகங்களில் இருந்து ஓய்வு பெற்றவர்கள், பொருட்களின் தற்போதைய விலையேற்றத்துக்கு மத்தியில், தமது ஓய்வூதியம் போதாமை மற்றும் ஏனைய அரச சலுகைளையும் பெற முடியாமலும் பெரும் துன்ப நிலைக்கு உள்ளாகியுள்ளனர்.

இதனால், அரசாங்கத்தால் கொண்டு வருடப்பட்ட 5,000 ரூபாய் அதிகரிப்பை ஏனைய ஓய்வூதியர்களுக்கு வழங்கியது போன்று, பல்கலைக்கழங்களில் பணியாற்றி ஓய்வு பெற்றவர்களுக்கும் வழங்குவதுடன், தமக்கான ஒரு சீரமைக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டத்தை நடைமுறைப்படுத்தி தம்மையும் வாழ வழிவிடுமாறும் பல்கலைக்கழகங்களில் இருந்து ஓய்வு பெற்றவர்கள் மேலும் கோரியுள்ளனர்.

அடம்பன் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட குருவில் வான் பகுதியில்

# புதையல் தோண்டியவர் கைது

## ஆறு சந்தேகநபர்கள் தப்பியோட்டம்

■ எஸ். றொசேரியன் லெம்பேட்

அடம்பன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட குருவில் வான் பகுதியில், புதையல் தோண்டிய சந்தேகத்தின் பேரில் ஒருவர் நேற்று முன்தினம் (15) மாலை கைது செய்யப்பட்டுள்ளார்.

மன்னார் இராணுவ புலனாய்வுத் துறையினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலையடுத்து, இராணுவமும் அடம்பன் பொலிஸாரும் இணைந்து குருவில் வான் பகுதியில் சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

இதன்போது குறித்த பகுதியில் புதையல் தோண்டும் நடவடிக்கையில் ஈடுபட்ட சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதோடு, மேலும் ஆறு சந்தேக நபர்கள் தப்பிச் சென்றுள்ளனர்.

புதையல் தோண்ட பயன்படுத்தப்பட்டுள்ள ஒரு தொகுதி பொருட்கள்



மீட்கப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர், அடம்பன் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதோடு புதையல் தோண்டப் பயன்படுத்தப்பட்ட பொருட்களும் அடம்பன் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.

தப்பியோடிய சந்தேகநபர்கள் ஆறு பேரை பொலிஸார் தேடி வருகின்றனர். மேலதிக விசாரணைகளை அடம்பன் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

அராலியில்

# 15 இலட்சம் ரூபாய் பெறுமதியான நகைகள் திருட்டு

■ எம். றொசாந்த்

யாழ்ப்பாணம், அராலி தெற்கில் வீடொன்றில் புகுந்த திருடர்கள் சுமார் 15 இலட்ச ரூபாய் பெறுமதியான நகைகளைத் திருடிச் சென்றுள்ளனர்.

குறித்த வீட்டில் வசிப்போர், நேற்று முன்தினம் (15) தமது உறவினர் வீடொன்றுக்கு சென்று விட்டு வீடு திரும்பியபோது, வீட்டின் கதவுகள் திறந்து இருப்பதைக் கண்ணுற்று வீட்டுக்குள் சென்று பார்த்தபோது, வீட்டுக்குள் பொருட்கள் சிதறிக் கிடந்துள்ளதுடன், நகைகள் வைக்கப்பட்டு இருந்த அலுமாரியில் இருந்த பொருட்களும் சிதறிக் காணப்பட்டன. அலுமாரிக்குள் வைக்கப்பட்டு இருந்த 11 பவுண் தாலிக்கொடி, ஒன்றரை பவுண் சங்கிலி என்பன களவாடப்பட்டுள்ளன.

சம்பவம் தொடர்பில், வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. முறைப்பாட்டின் பிரகாரம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

நல்லாட்சியில் உயிர்ப்பிக்கப்பட்ட ஜனநாயகத்தை

# அரசாங்கம் கொன்றுவிட்டது

## முன்னாள் பிரதியமைச்சர் கணேசமூர்த்தி

■ வ.சக்தி

வடக்கு, கிழக்கிலுள்ள தமிழ் மக்களுக்கு ஒரு நிரந்தர அரசியல்தீர்வு கிடைக்கப்பெறவேண்டும் எனும் நோக்கத்துடன் புதிய அரசியலமைப்பை உருவாக்கி, பாராளுமன்ற தெரிவுக்குழுவையும் உருவாக்கி செயற்பட்டதுதான் எமது கடந்த கால நல்லாட்சியாகும் எனத் தெரிவித்த ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் பட்டிருப்பு தொகுதி அமைப்பாளர் சோ.கணேசமூர்த்தி, அந்த ஆட்சியிலேயே நாட்டின் ஜனநாயகம் உயிர்ப்பிக்கப்பட்டது என்றார்.

மட்டக்களப்பு, களுவாஞ்சிகுடியில் அமைந்துள்ள இராசமாணிக்கம் மண்டபத்தில் செவ்வாய்கிழமை (15) நடைபெற்ற கட்சி ஆதரவாளர்களுடனான ஒன்றுகூடலின்போது, கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் அங்கு கூறியதாவது:

ஒய்வூதியக்காரர்களுக்குரிய பிரச்சினை, மேலும் பல அபிவிருத்தித்திட்டங்கள் என்பன ஏற்படுத்தப்பட்டன. துரதிர்ஷ்டவசமாக பாராளுமன்றம் கலைத்தமையால், அவற்றை முன்கொண்டு செல்ல முடியாமல் போய்விட்டது. ஆனாலும், அரசியலமைப்பில் அப்போது 19 ஆவது திருத்தம் கொண்டுவரப்பட்டது.

எம்மால் உயிர்ப்பிக்கப்பட்ட ஜனநாயகத்தை தற்போதுள்ள அரசாங்கம் மரணிக்கச் செய்துள்ளது. ஆணைக்குழுக்கள் அனைத்தும் சுதந்திரமற்ற நிலையில் காணப்படுகின்றன. எனவே ஜனநாயகத்தை நிலைநிறுத்துவதற்கு கடந்த நல்லாட்சியில்தான் அடித்தளமிடப்பட்டது.

தற்போது 20ஆவது சரத்தைக் கொண்டுவந்து அவைகளனைத்தும் தவிடுபொடியாக்கப்பட்டுள்ளன. அரசாங்கம் பசளையை நிறுத்தி விவசாயிகளின் வயிற்றில் அடித்துள்ளது. இதனால் விவசாயிகள் பாரிய நட்டத்தை எதிர்கொண்டுள்ளார்கள்.



இலவசமாக பசளை வழங்குவோம் எனத் தேர்தல் காலத்தில் கூறினர். எனினும், பணம் கொடுத்துக்கூட பெற்றுக் கொள்ள முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

நாட்டில் எந்தப் பொருட்கள் கொள்வனவு செய்வதற்குச் சென்றாலும் வரிசையில் நிற்கவேண்டியுள்ளது. வரிசை யுகம் ஏற்பட்டுள்ளது. இவற்றைக் கருத்திற்கொண்டு நாட்டுமக்கள் இந்த அரசாங்கத்தை மாற்றுவதற்குத் தீர்மானித்துள்ளார்கள்.

இந்நாட்டின் சரித்திரத்திலே இல்லாத பிரச்சினைகளை தற்போது மக்கள் எதிர்கொண்டு வருகின்றார்கள். இதிலிருந்து மீள்வதற்கான ஒரே வழி இந்த அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்பிவிட்டு, எமது கட்சியின் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் ஸ்திரமான அரசாங்கத்தை நிறுவவேண்டும். இதற்கு மக்கள் அனைவரும் ஒன்றிணைய வேண்டும் என அவர் இதன்போது தெரிவித்தார்.



# காட்டு யானைகள் துவம்சம் செய்தன

■ தீஷான் அஹமட்

திருகோணமலை, சேருநுவர பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள ஆதியம்மன்கேணி கிராமத்துக்குள் நேற்று (16) அதிகாலை உட்புகுந்த காட்டு யானைகள், வீடொன்றை பகுதியளவில் சேதப்படுத்தி, வீட்டிலிருந்த பொருட்களை நாசப்படுத்திச் சென்றுள்ளன.

அத்தோடு கிராமத்துக்குள் உட்புகுந்த காட்டு யானைகள், 30க்கும் மேற்பட்ட தென்னை மரங்கள், 100 க்கும் மேற்பட்ட வாழை மரங்களையும் சேதப்படுத்திச் சென்றுள்ளதாக பிரதேச மக்கள் கவலை வெளியிடுகின்றனர். கூலித்தொழில் செய்து ஜீவனோபாயத்தை கொண்டு நடத்தும் தாம், காட்டு யானைகளால் பாதிக்கப்பட்டு வருவதால் இதற்குரிய நட்டஈட்டையும், யானைப் பாதுகாப்பு வேலியையும் பெற்றுத்தர வேண்டுமென கோரிக்கை விடுக்கின்றனர்.

யானைகளுக்கு ஏதாவது நடந்தால் ஓடோடி வரும் அதிகாரிகள், யானைகள் மனிதர்களையோ அவர்களது உடமைகளையோ சேதப்படுத்தினால் அதைக் கண்டு கொள்வதில்லையென இவர்கள் விசனம் தெரிவிப்பதோடு இதுவரை தமது கிராமத்தில், காட்டு யானைகள் தாக்கி 10 க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர் என்றும் ஆதியம்மன்கேணி கிராம மக்கள் கவலைத் தெரிவிக்கின்றனர்.

# பூரணை தினத்தன்று வெடித்தது அடுப்பு

■ வி.சுகிர்தகுமார்

அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் பிரிவில் சமையல் எரிவாயு அடுப்பொன்று நேற்று (16) வெடித்துள்ளது. பிரதேச செயலக முன்வீதி அக்கரைப்பற்று 8இல் உள்ள வீடொன்றிலேயே இவ்வெடிப்பு சம்பவம் இடம்பெற்றுள்ளது.

“சமையலில் ஈடுபட்டிருந்தபோது திடீரென சத்தமொன்று உருவானது. இதன் பின்னர், குறித்த அடுப்பின் மேற்புற கண்ணாடி



உடைந்து செல்வதையும் அவதானித்தேன்” என, சமையலில் ஈடுபட்ட பெண் தெரிவித்தார்.

ஆயினும், இச்சம்பவத்தால் வேறு எவ்வித பாதிப்புகளும் ஏற்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

# சமுர்த்தி பயனாளிகளுக்கு அதிகரித்த கொடுப்பனவு



சுபீட்சத்தின் நோக்கு கொள்கைப் பிரகடனத்துக்கு அமைவாக கடந்த வரவு -செலவு திட்டத்தின் மூலம் சமுர்த்தி பயனாளிகளுக்கு அதிகரிக்கப்பட்ட சமுர்த்தி கொடுப்பனவு வழங்க அங்கிகரிக்கப்பட்டது.


அதற்கமைவாக மண்முனைப்பற்று பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட சமுர்த்தி பயனாளிகளுக்கு அதிகரிக்கப்பட்ட சமுர்த்தி கொடுப்பனவை வழங்கும் பிரதான நிகழ்வு கிரான்குளம் தெற்கு பல்தேவைக்கட்டட மண்டபத்தில் பிரதேச செயலாளர் திருமதி. ந. சத்தியானந்தி தலைமையில் நடைபெற்றது.

# அரசாங்கத்திடம் இருந்து மக்களைப் பாதுகாக்க வேண்டும்

■ எம்.சி. அன்சார்

தேசிய பாதுகாப்பையும் மக்களின் பாதுகாப்பையும் உறுதிப்படுத்தவே தற்போதைய அரசாங்கம் ஆட்சிக்கு வந்தது. ஆனால், அரசாங்கத்திடம் இருந்து மக்களைப் பாதுகாப்பதே இன்று எமது நோக்கமாக இருக்கின்றது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

ஆரோக்கியமான நாட்டைக் கட்டியெழுப்பும் நோக்கில் ஐக்கிய மக்கள் சக்தியால் முன்னெடுக்கப்பட்டு வரும் ‘ஜனசுவய’ சமூக நலன் திட்டத்தின் ஊடாக, மூன்று மில்லியன் ரூபாய் பெறுமதியான மருத்துவ உபகரணங்கள், சம்மாந்துறை ஆதார வைத்தியசாலைக்கு



எதிர்க்கட்சித் தலைவரால் அன்பளிப்புச் செய்யப்பட்டது.

வைத்திய அத்தியேட்சகர் ஆசாத் எம். ஹனீபா தலைமையில் இந்த வைபவம் நேற்றுமுன்தினம் (15) நடைபெற்றது. இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் இங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில், தற்போதைய அரசாங்கம் மக்களுக்கு அவ்வப்போது புதிய பரிசுகளை வழங்கி வருகிறது. உரம் வழங்கும் நடைமுறையை இல்லாமலாக்கிய, வெடிக்கும் எரிவாயு சிலிண்டர்களை வழங்கியதும் மட்டுமல்லாமல், சுபீட்சத்தின் தொலைநோக்கு என்ற பார்வைக்குப் பதிலாக ‘இருளின் நோக்கு’ பார்வையையே அரசாங்கம் செயற்படுத்தி வருகின்றது.

கருத்து சுதந்திரம், பேச்சு உரிமை, அரசியல் சுதந்திரம் போன்ற அனைத்து உரிமைகளையும் அரசாங்கம் மீறிச் செயற்படுகின்றது. 24 மணி நேரமும் மக்களின் உரிமைகளை மீறும் அரசாங்கமே இன்று ஆட்சியில் இருக்கின்றது என்றார்.

மலையகத்தில் கோவில்கள் உடைப்பு:

# பொலிஸ் விசாரணைகள் மந்தகதியில்

■ டி.ஷங்கீதன்

மலையகத்தில் தொடரும் கோவில் உடைப்புகள் தொடர்பாக பொலிஸ் விசாரணைகள் மந்தகதியில் இடம்பெறுவதாக பாராளுமன்ற உறுப்பினர் வே. இராதாகிருஸ்ணன் குற்றம் சுமத்தியுள்ளார்.

நுவரெலியா மாவட்டத்தில், கோவில்கள் தொடர்ச்சியாக உடைக்கப்படுகின்ற சம்பவங்கள் இடம்பெற்று வருகின்ற நிலையில், இது தொடர்பாக இதுவரையில் எவரும் கைது செய்யப்படவில்லை. இதன் மூலம் தெரியவருவதாவது, பொலிஸாரின் விசாரணைகள் மந்த கதியில் நடைபெறுகின்றன என்பதே என்றார்.


**வெறுமனே முறைப்பாடுகளை மாத்திரம் பதிவு செய்து வைப்பதன் மூலம், எதுவும் நடைபெறாது.அது மாத்திரமன்றி, கோவில் நிர்வாகத்தை மாத்திரமே விசாரணை செய்கின்றார்கள்.எனவே, சம்பவத்துடன் தொடர்புடையவர்களை இனம் காண்பதற்கு, விசேட செயற்றிட்டம் வேண்டும்**

இது தொடர்பாக அவர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்,

நுவரெலியா மாவட்டத்தில் கோவில் உடைப்பு சம்பவங்கள் தொடர்ச்சியாகப் பதிவாகிவருகின்றன.நேற்று முன்தினம் (15) அக்கரபத்தனை, டயகம் பகுதிகளில் சுமார் ஐந்து கோவில்கள் உடைக்கப்பட்டுள்ளன.

அந்தக் கோவில்களில் இருந்த உண்டியல்கள் களவாடப்பட்டுள்ளன. அதேபோல நகைகளும் களவாடப்பட்டுள்ளன. இது தொடர்பாக, உடனடியாக நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு நுவரெலியா மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபர் பிரசாத் ரணசிங்ஹவிடம் தொலைபேசியில் தொடர்பு கொண்டு தெரிவித்துள்ளேன்.அவரும் குறித்த பகுதிக்கு விசேட பொலிஸ் குழு ஒன்றை அனுப்பிவைப்பதாக என்னிடம் தெரிவித்தார்.

வெறுமனே முறைப்பாடுகளை மாத்திரம் பதிவு செய்து வைப்பதன் மூலம், எதுவும் நடைபெறாது. அது மாத்திரமன்றி, கோவில் நிர்வாகத்தை மாத்திரமே விசாரணை செய்கின்றார்கள். எனவே, சம்பவத்துடன் தொடர்புடையவர்களை இனம் காண்பதற்கு, விசேட செயற்றிட்டத்தை பொலிஸார் மேற்கொள்ள வேண்டும் என்றார்.



தேயிலைத் தூளைத் திருடிய

# மூவர் கைது

■ ரஞ்சித் ராஜபக்‌ஷ



நோர்வூட், டிலரி தோட்டத் தொழிற்சாலையில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த தேயிலைத் தூளை திருடிய மூவர் நேற்று முன்தினம் (15) மாலை கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

குறித்த தொழிற்சாலையில் காவலாளியாக கடமையாற்றும் ஒருவரும் பணியாளர்கள் இருவருமே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் மூவரும் 14ஆம் திகதி நள்ளிரவு 12.40 மணியளவில் குறித்த தொழிற்சாலையின் களஞ்சியசாலைக்குள் சூட்சுமமாக நுழைந்து, 172 கிலோ கிராம் தேயிலைத் தூளை திருடியுள்ளனர்.

இந்த விடயம் தொடர்பில் தோட்ட முகாமையாளர், நோர்வூட் பொலிஸாருக்கு செய்த முறைப்பாட்டுக்கு அமையவே மூவரும் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு திருடப்பட்ட தேயிலைத் தூள், புளியாவத்த பிரதேசத்திலுள்ள வர்த்தக நிலையமொன்றுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளதாகவும் இதனையடுத்து குறித்த வர்த்தக நிலையத்தின் பணியாளர் ஒருவரும் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்களை ஹட்டன் நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக நோர்வூட் பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, இந்த மாதம் 14ஆம் திகதி, பொகவந்தலாவ, லொய்னோன் தோட்டத் தொழிற்சாலையில் உள்ள பெருந்தொகையான கழிவு தேயிலையை அனுமதி பத்திரமின்றி கொண்டு சென்ற இருவர், மஸ்கெலியா விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டனர். கழிவுத் தேயிலையும் கைப்பற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கோதுமை மாவை வழங்கி

# தொழிலாளர்களை இழிவுபடுத்துகின்றனர்

## இராஜாராம் தெரிவிப்பு

■ பி.கேதீஸ்



எமது இந்திய வம்சாவளி பெருந் தோட்டத் தொழிலாளர்கள், 'ஆண்டான் அடிமை'களாக அதாவது, கொத்தடிமைகளாகவே இன்னும் வாழ்ந்து வருகின்றார்கள் என மலையக மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளரும் முன்னாள் மத்திய மாகாண சபை உறுப்பினருமாகிய ஆர். இராஜாராம் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் (15) நடைபெற்ற ஊடகச் சந்திப்பொன்றின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

**அண்மையில் அரசாங்கம் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு 5,000 ரூபாய் சம்பளத்தை அதிகரித்துள்ளது. ஆனால் தொழிலாளர்களுக்கு கோதுமை மா வழங்கி, இழிவுபடுத்தி உள்ளது**

தொடர்ந்து தெரிவித்த அவர், இந்திய வம்சாவளி மக்களை இந்நாட்டில் வாழும் ஒரு தேசிய இனமாக இன்னும் பிரகடனம் செய்யவில்லை. அதேபோல், இந்த மக்களுக்கு இந்நாட்டில் ஒரு தேசிய அந்தஸ்தும் கிடைக்கவில்லை. இந்தியாவிலிருந்து இங்கு குடியேறியவர்களாகவே வழி நடத்தப்படுகிறனர். நாம், இந்த நாட்டில் உரிமையற்ற அடிமைகளாகவே வாழ்கின்றோம்.

பெருந்தோட்ட மக்கள் ஏற்கெனவே இருந்ததை விட, தற்பொழுது மோசமான நிலையில் வாழ்கின்றார்கள். அண்மையில் அரசாங்கம் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு 5,000 ரூபாய் சம்பளத்தை அதிகரித்துள்ளது. ஆனால் தொழிலாளர்களுக்கு கோதுமை மா வழங்கி, இழிவு படுத்தியுள்ளது.

தோட்டத் தொழிலாளர்கள் கோதுமை மாவை மாத்திரமா உணவாகப் பயன்படுத்துகின்றார்கள். மாவை வழங்கி, எமது சமூகத்தை எந்தளவுக்கு இழிவு படுத்த முடியுமோ அந்த அளவுக்கு இழிவு படுத்துகின்றார்கள்.

அத்தோடு தொழிலாளர்களுக்கு

**தொழிலாளர்களுக்கு வழங்கும் கோதுமை மா பொதியில், 'தோட்டத் தொழிலாளர்களுக்கான மானிய நலத் திட்டம்' எனக் குறிப்பிட்டு நான்கு அமைச்சுகளின் பெயர்களை அச்சிட்டு, மா விற்பனை செய்யப்படுகிறது**

வழங்கும் கோதுமை மா பொதியில், தேர்தல் பிரசாரம் செய்வது போல, 'தோட்டத் தொழிலாளர்களுக்கான மானிய நலத் திட்டம், நிதி அமைச்சு, தோட்ட வீடமைப்பு மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சு, வர்த்தக அமைச்சு, கூட்டுறவு சேவைகள் சந்தைப்படுத்தல் மேம்பாட்டு நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சு' என அமைச்சுகளின் பெயர்களை அச்சிட்டு, மாவை விற்பனை செய்கின்றார்கள் என்றார்.



# வழிகாட்டி நூல்கள் வழங்கி வைப்பு



சமூக சேவையாளர் சந்திரகுமாரின் நிதியுதவியில், அக்கரப்பத்தனை, லோவகிரன்ட்லி பாடசாலையில் கல்வி கற்கும் தரம் 5 மாணவர்களுக்கு, இலவசமாக புலமைப்பரிசில் வழிகாட்டி நூல்கள் வழங்கி வைக்கப்பட்டன. அத்தோடு 25 வருட அரச சேவையைப் பூர்த்தி செய்த அப்பாடசாலையின் அதிபர் தேசபந்து பாலகிருஸ்ணன், பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார். (பி. கேதீஸ்)




# ஹட்டனில் முட்டையின் விலை குறைந்தது

■ சுதத்.எச்.எம்.ஹேவா

கடந்த சில தினங்களாக ஹட்டனில் அதிக விலைக்கு விற்கப்பட்ட முட்டையின் விலை, தற்போது குறைவடைந்துள்ளது என நுகர்வோர் தெரிவிக்கின்றனர்.

இதற்கமைய, கடந்த காலங்களில் 28 - 30 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்ட முட்டையின் விலை 18 தொடக்கம் 20 ரூபாயாக விலை குறைவடைந்துள்ளதாக தெரிவிக்கின்றனர்.

இதனால் நகரிலுள்ள முட்டை விற்பனை நிலையங்களில் அதிகளவு முட்டை விற்பனை நடைபெறுவதாக முட்டை வர்த்தக நிலைய உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

அக்கரப்பத்தனையில்

# மீண்டும் கோவில்கள் உடைக்கப்பட்டன

## சந்தேகநபர் ஒருவரும் கைது

■ பி.கேதீஸ்

அக்கரப்பத்தனை,டயகம பகுதிகளில் தொடர்ச்சியாக கோவில்கள் உடைக்கப்படும் சம்பவங்கள் அதிகமாகப் பதிவாகி வருகின்றன.

இந்நிலையில், நேற்று (16) காலை அக்கரப்பத்தனை, கிளாஸ்கோ வல்லடையான் கோவில், மோனிங்டன் ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில், கிளபோர்க் ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில் ஆகியன இனந்தெரியாதோரால் உடைக்கப்பட்டு உண்டியல்களிலுள்ள பெருந்தொகையான பணமும் தங்க நகைகளும் களவாடப்பட்டுள்ளன.


இதேவேளை, இக்கொள்ளைச் சம்பவத்துடன் தொடர்புடைய நபர், டயகம மோனிங்டன் மேல்பிரிவு தோட்டத்தில் வைத்து நேற்று (16) பொதுமக்களால் சுற்றிவளைக்கப்பட்டு, டயகம பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை டயகம, அக்கரப்பத்தனை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.



# மாத்தளையில் அடையாளம் தெரியாத சடலம் மீட்பு

■ மஹேஸ் கீர்த்திரத்ன



மாத்தளை நகரின் பிரதான வீதியிலுள்ள வர்த்தக நிலையமொன்றுக்கு அருகிலிருந்து, அடையாளம் தெரியாத சடலமொன்று மீட்கப்பட்டுள்ளது.

**ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளதுடன், குறித்த நபர் யார் என்பது தொடர்பில் தகவல்கள் எதுவும் தெரியவரவில்லை**

நேற்று (16) காலை குறித்த சடலம் மீட்கப்பட்டுள்ளதாக மாத்தளை பொலிஸார் தெரிவித்தனர்.

ஆண் ஒருவரின் சடலமே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளதுடன், குறித்த நபர் யார் என்பது தொடர்பில் இதுவரை தகவல்கள் எதுவும் தெரியவரவில்லை என பொலிஸார் தெரிவித்தனர். எனவே அந்த நபரை அடையாளம் காண்பதற்கு பொதுமக்களின் உதவியை நாடியுள்ள பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

பதுளை மாவட்டத்தில்

# 7,953 அபிவிருத்தி வேலைத்திட்டங்கள்



■ எம். செல்வராஜா

நாட்டில் ஓர் இலட்சம் வேலைத்திட்டத்தின் கீழ், பதுளை மாவட்டத்தில் 7,953 அபிவிருத்தி வேலைத்திட்டங்களை முன்னெடுக்கப்படுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதென்று, பதுளை மாவட்ட அரச அதிபர் தமயந்தி பரணகமை தெரிவித்தார்.

அரசாங்கத்தின் ஓர் இலட்சம் வேலைத்திட்டத்தின் பிரகாரம், பதுளை மாவட்டத்தில் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகள் குறித்து, பதுளை மாவட்ட அரச அதிபர் தமயந்தி பரணகமையிடம் வினவியபோதே, அவர் மேற்கண்டவாறு கூறினார்.

தொடர்ந்து அவர் கூறுகையில், "உட்கட்டமைப்பு அபிவிருத்தி, வாழ்வாதார அபிவிருத்தி, சமூக நலன்புரி, சுற்றுச் சூழல் அபிவிருத்தி போன்ற வேலைத்திட்டங்களுக்கு 3,720 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, பதுளை மாவட்டத்தின் 567 கிராம சேவைப் பிரிவுகள் உள்ளன. அவற்றுக்குத் தலா மூன்று மில்லியன் ரூபாய் என்ற அடிப்படையிலும், பிரதேச சபைகள் போன்ற உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களுக்கு தலா நான்கு மில்லியன் ரூபாய் என்ற அடிப்படையிலும், முன்னாள் மாகாண சபை உறுப்பினர்களுக்கு தலா இருபது மில்லியன் ரூபாய் என்ற அடிப்படையிலும் நிதி ஒதுக்கீடு செய்யப்படும். அத்துடன்,

**பதுளை மாவட்டத்தின் 567 கிராம சேவைப் பிரிவுகள் உள்ளன. அவற்றுக்குத் தலா மூன்று மில்லியன் ரூபாய் என்ற அடிப்படையிலும், பிரதேச சபைகள் போன்ற உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களுக்கு தலா நான்கு மில்லியன் ரூபாய் என்ற அடிப்படையிலும், முன்னாள் மாகாண சபை உறுப்பினர்களுக்கு தலா இருபது மில்லியன் ரூபாய் என்ற அடிப்படையிலும் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்**

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து 150 மில்லியன் ரூபாய் என்ற வகையில் பல்வேறு அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்கென ஒதுக்கப்படவுள்ளன.

இதன் ஆரம்ப நிகழ்வு கடந்த மூன்றாம் திகதி நாடளாவிய ரீதியில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இந்த அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் மாவட்டத்தின் 567 கிராம சேவை பிரிவுகளிலும் வைபவ ரீதியாக மேற்கொள்ளப்பட்டன" என்றார்.

# சீறிப் பார்த்து இருப்பை உறுதி செய்வது காலத்தின் அவசியம்

உன்னுடைய தேவையை, நீ நிறைவேற்றிக்கொள்ள வேண்டுமாயின், கதவைத் தட்டு, "தட்டினால்தான் கதவு திறக்கப்படும்" என்பார்கள். தட்டாத எந்தவொரு கதவுமே, தானாகத் திறந்து, உங்களுடைய கோரிக்கைகளை ஒருபோதும் நிறைவேற்றாது என்பதை ஞாபகத்தில் கொள்ளவேண்டும். அதேபோல, முன்வைக்கப்படும் கோரிக்கையும் நியாயமானதாக இருக்கவேண்டும்.

அரசாங்கம், பல சேவைகளை அத்தியாவசிய சேவையாகப் பிரகடனப்படுத்தியுள்ளது. தமது கோரிக்கைகளை நிறைவேற்றிக்கொள்ளும் வகையில், பல தொழிற்சங்கங்கள் போராட்டங்களை முன்னெடுத்தன. இதனால், பொதுமக்கள் பல்வேறான அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்தனர். சுகாதாரத்துறையால் முன்னெடுக்கப்பட்ட போராட்டம், 16 நாள்களாக நீடித்தது; நோயாளர்கள் பெரும் அவதிப்பட்டனர்.

போராட்டங்களை முன்னெடுத்திருக்காவிடின், இவ்வாறான தொழிற்சங்கங்கள் இருக்கின்றனவா என்பது தொடர்பில் ஆட்சியாளர்கள் மறந்தே இருப்பர். அத்துடன் அத்தியாவசிய சேவைக்குள் உள்வாங்கியிருக்க வேண்டிய நிர்ப்பந்தமும் ஏற்பட்டிருக்காது. ஆக, நாங்கள் இருக்கின்றோம் என்பதை அவ்வப்போது ஞாபகமூட்ட வேண்டும். ஆட்சியாளர்களும் சீறிப் பார்த்து, தமது இருப்பை உறுதி செய்துகொள்ளவேண்டும்.

மக்கள் துன்பத்தில் விழுந்துவிடாத வகையில், ஆட்சியாளர்களுக்கு ஞாகமூட்டவேண்டிய மிகப்பெரிய பொறுப்பு, எதிர்க்கட்சியினருடையது. தற்போதைய எதிர்க்கட்சியை பார்க்குமிடத்து, 'பாம்புக்கும் வலிக்காமல், தடியும் முறிந்துவிடாமல்' இருக்கவேண்டும் என்பதைப் போல நடவடிக்கைகளை எடுத்துவருகின்றது. இது அவர்களது இருப்பை கேள்விக்கு உட்படுத்திவிடும்.

ஆட்சியாளர்களே அணியைத் திரட்டி, தமது பலத்தை அநுராதபுரத்தில் வைத்து காட்டியிருந்தனர். ஆக, கொரோனா சுகாதார வழிகாட்டல்கள் ஒரு மூலையில் தூக்கியெறியப்பட்டு விட்டது. இந்நிலையில், ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கை நிதியின் மீது அறவிடப்படுவதாகக் கூறப்பட்ட மிகைக் கட்டண வரி அறிவிப்பின் போது, எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து இருந்தால், தொழிலாளர்களையும் ஒன்றிணைத்துக்கொண்டு தமது பலத்தைக் காட்டியிருக்கலாம்.

அதனூடாக, தமது பயணத்துக்கு ஆரம்பப் புள்ளியை இட்டிருக்கலாம். ஆனால், சின்னச் சின்ன மேடைகளில் ஏறுவதிலேயே எதிரணியினர் குறியாக இருக்கின்றனர். எதிரணியின் பங்காளி கட்சிகள், பல்வேறான கொள்கைகளைக் கொண்டிருக்கின்றன. ஆகையால், ஓரணியில் திரண்டு நிற்பதென்பது இயலாத காரியமாகும். எனினும், 'மிகைக் கட்டண வரி'க்கு எதிராக, ஓரணியில் திரண்டிருக்கலாம். தீண்டாமல் இருக்கும் பாம்பைத் துரத்தித் துரத்தி அடிப்பர். மக்களுக்கு துன்பம் விளைவிக்காது, நிம்மதியாக அப்பாம்பு வாழவேண்டுமாயின், அவ்வப்போது சீறிப் பாயவேண்டும். அப்போதுதான் ஒரு பயமிருக்கும்.

அதனால்தான் என்னவோ, போராட்டம் நடத்துபவர்கள் மீது தாக்குதல் நடத்தவேண்டாமென ஜனாதிபதி அறிவுறுத்தியுள்ளார். ஆனால், பல சேவைகளை அத்தியாவசிய சேவைக்குள் முடுக்கிவிட்டுள்ளார். ஆக, ஆர்ப்பாட்டங்கள், பேரணிகள், வேலைநிறுத்தங்கள் உள்ளிட்டவற்றை பெரிதாக எதிர்பார்க்கமுடியாது. இதுதான் தீண்டாமல் சீறியதாகும். இது பாம்புக்கு மட்டுமல்ல ஒவ்வொருவருக்கும் பொருத்தமானதாகவே இருக்கும் என்பதை ஞாபகத்தில் கொள்க.



தமிழ்Mirror க்கு எழுதுங்கள்
www.tamilmirror.lk


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk






## வாழ்வியல் தரிசனம்

தியாகம் செய்பவர்கள் தங்களைத் தாங்களே வலிமைப்படுத்துகின்றார்கள். பலவீனமான எண்ணங்கள் உள்ளவர்கள், தியாகியாகிவிட முடியாது.

நல்ல காரியங்களைச் செய்யும்போது, பின்வாங்காமல் இருக்க வீரம்மிகு உணர்வு தேவையானது. நல்ல விடயங்கள் எல்லாமே எளிதில் கிடைக்காது. போராடித்தான் வெல்ல வேண்டும்.

அடக்குமுறைகளை எதிர்க்கும்போது, தர்மம் தீயவர்களுக்கு எதிராகப் போராடுகின்றது. தர்மத்தின் தூதுவர்கள் தியாகம் புரிபவர்கள் ஆவார்கள்.

எவரையும் காழ்ப்புணர்வுடன் நோக்காதவர்களும் எழுச்சியுடன் நினைத்ததை முடிப்பவர்களும் ஓய்வுஇல்லாமல் உழைப்பவர்களும் மக்களின் சேவகர்களாகின்றார்கள்.

உண்மையானவர்களை விலைக்கு வாங்கமுடியாது. ஆனால், அரசியலில் எல்லாவிதமான வர்ணங்களையும் நினைத்தமாத்திரத்தில் உருவாக்கும் மகாநடிகர்கள் ஏராளம்! ஏராளம்!!

நீதிக்காக உறங்கா நிலையில் இருப்பவர்கள் தியாகிகள்.

பருத்தியூர் பால. வயிரவநாதன்

# கஜன்களின் 'பல்லிளிக்கும்' அரசியல்



புருஜோத்தமன் தங்கமயில்

தமிழீழ விடுதலைப் புலிகள், தனிநாடு கோரிப் போராடவில்லை என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் (கஜன்கள் அணி) செயலாளர் செல்வராசா கஜேந்திரன், அரசியல் விவாத நிகழ்ச்சியொன்றில் பேசிய விடயம், கடந்த வாரம் சர்ச்சையானது.

அதுபோல, அதேவாரத்தில் வடக்கு மீனவர் பிரச்சினை தொடர்பில், பாராளுமன்றத்தில் ஒத்திவைப்புப் பிரேரணையைக் கொண்டுவரத் தீர்மானித்திருந்த முன்னணி, இந்திய தூதரக அதிகாரியின் தொலைபேசி அழைப்பை அடுத்து, அந்த ஒத்திவைப்புப் பிரேரணையைக் கைவிட்டது. இது, வடக்கு மீனவர் அமைப்புகளால் நம்பிக்கைத் துரோகமாக விமர்சிக்கப்பட்டது.

முள்ளிவாய்க்கால் முடிவுகளுக்குப் பின்னரான நெருக்கடியான காலப்பகுதியில், (குறிப்பாக, 2010 பொதுத் தேர்தலுக்கு அண்மித்த நாள்களில்) தமிழ்த் தேசிய கூட்டமைப்பு, தமிழ் மக்களுக்குத் துரோகம் செய்வதாகக் கூறிக்கொண்டு கஜேந்திரகுமார் பொன்னம்பலம், கஜேந்திரன் உள்ளிட்டவர்கள், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியை ஆரம்பித்தார்கள்.

முன்னணி ஆரம்பிக்கப்பட்ட காலத்தில், அதை அரசியல் கட்சியாக முன்னிறுத்திய கஜேந்திரகுமார், அதைக் கட்சியாகப் பதிவு செய்வதைத் தவிர்த்து வந்தார். அதன்மூலம், முன்னணியை அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸின் 'சைக்கிள்' சின்னத்தில், தேர்தல்களில் போட்டியிட வைக்க முடியும் என்பது அவரது நிலைப்பாடு. அத்தோடு, முன்னணியைக் கட்சியாகப் பதிவு செய்தால், 'மாற்ற முடியாத ஒற்றைத் தலைமை' எனும் தன்னுடைய இடம், கேள்விக்கு உள்ளாக்கப்படும் எனும் அச்சமும் அவரைச் சூழ்ந்து கொண்டது.

அதனால், முன்னணியை புறத் தோற்றமாகக் காட்டினாலும், காங்கிரஸ் எனும் குடும்பக் கட்சியில் தங்கியிருக்க விரும்பினார். இந்த விடயம், மெல்லமெல்ல விமர்சனங்களாக மேலெழுந்த போது, "முன்னணி, அரசியல் கட்சியல்ல; அது ஓர் அரசியல் இயக்கம். அதைப் பதிவு செய்தால், எதிர்கால நடவடிக்கைகளுக்குப் பாதிப்பு ஏற்படும்" என்று, கடந்த பொதுத் தேர்தல் காலத்தில் அறிவிப்பை கஜேந்திரகுமார் வெளியிட்டார்.

முன்னணியை ஒரு கட்சியாக முன்னிறுத்திய அதன் ஆதரவாளர்களுக்கும் முக்கியஸ்தர்களுக்கும், கஜேந்திரகுமாரின் இந்த அறிவிப்பால், மக்களுக்கு பதிலளிக்க முடியாத நிலை ஏற்பட்டது. ஏனெனில், கடந்த காலங்களில் அவர்கள் முன்னணி, பதவி செய்யப்பட்ட கட்சியாக மாறும், காங்கிரஸின் 'சைக்கிள்' சின்னத்தில் தொடர்ந்தும் தங்கியிருக்காது என்று பேசி வந்திருக்கிறார்கள்.

கஜேந்திரகுமாரும் கஜேந்திரனும், தமிழ்த் தேசிய பரப்பிலுள்ள அரசியல் கட்சிகள், அமைப்புகள் உள்ளிட்ட அனைத்துத் தரப்புகளையும் நோக்கி, துரோகப் பட்டத்தை சூட்டி வந்திருக்கிறார்கள். அதுபோல, முன்னணியின் செயற்பாட்டைக் கேள்விக்குள்ளாக்கும் ஆதரவாளர்கள், உறுப்பினர்களை 'துரோகி'கள் என்று அடையாளப்படுத்துவதில் குறியாக இருந்திருக்கிறார்கள்.

என்றைக்குமே கேள்விக்கு அப்பாலான தரப்பாக, தங்களை வைத்துக் கொள்ளவே அவர்கள் விரும்பினார்கள். தாங்கள், யாரை நோக்கியும் எந்தவிதமான கேள்வியையோ, விமர்சனத்தையோ, துரோகப் பட்டங்களையோ வழங்கலாம். ஆனால், தங்களை நோக்கி, மற்றவர்கள் அவ்வாறான செயற்பாடுகளை செய்யக் கூடாது என்று எதிர்பார்ப்பது, ஒரு வகையில் பாசிச மனநிலை. அந்த மனநிலையை முன்னணியின் தொண்டர்களிடமும் மிக நுட்பமாக அவர்கள் வளர்த்திருக்கின்றார்கள். ஒரு வகையில் அது மூளைச்சலவைக்கு ஒப்பானது.

தங்களைக் கேள்விகள் இன்றி ஆதரித்தால், அவர்களின் பின்னணி, கடந்த கால வரலாறுகள் எல்லாவற்றுக்கும் புனித வட்டங்களை வரையத் தயாராக இருந்தார்கள். சுரேஷ் பிரேமசந்திரனின் ஈ.பி.ஆர்.எல்.எப், தர்மலிங்கம் சித்தார்த்தனின் புளொட் ஆகியவற்றுடன் தமிழ் மக்கள் பேரவையில் இயங்கியதும் ஒரே மேடையில் தமிழ்த் தேசியம் பற்றிய அறைகூவல்களை இணைந்து விடுத்ததும் வரலாறு.

ஈ.பி.ஆர்.எல்.எப்போடு இணைந்து தேர்தலில் போட்டியிடுவது வரையில் கஜன்கள் (கஜேந்திரகுமார், கஜேந்திரன்) தயாராக இருந்தார்கள். அப்போதெல்லாம், ஈ.பி.ஆர்.எல்.எப்பும் புளொட்டும் போராட்ட காலங்களில் புரிந்த படுகொலைகளும் குற்றங்களும் அவர்கள் கண்ணுக்கு தெரியாது. அதை மறந்து நின்று, ஒரே நிலைப்பாட்டில் பயணிப்பதாகக் கூறுமளவுக்கு இருந்திருக்கிறார்கள்.

ஆனால், தங்களின் எதிர்பார்ப்புகளை மற்றக் கட்சிகள் நிறைவேற்றவில்லை என்றால், அவர்களின் கடந்த கால வரலாறுகளை எல்லாம் தோண்டியெடுத்து, துரோக அரசியல் பற்றிப் பேசுவார்கள். இவ்வாறான நிலை, ஒரு கட்டத்தில் முன்னணியில் கஜன்களின் செயற்பாடுகளால் அதிருப்தியடைந்து, கேள்வியெழுப்பிய மணிவண்ணன் தலைமையிலான குழுவை பிளவுபடவும் வைத்தது.

இன்றைக்கு, முன்னணியின் உரிமை கோரும் நடவடிக்கையில், மணி அணியும் ஈடுபட்டிருக்கின்றது. மணி அணியிலுள்ள பலரையும் நோக்கி, கஜன்கள் அணியினர், 'ஆவா' குழு உறுப்பினர்கள், கஞ்சா கடத்தல்காரர்கள் என்று பட்டம் சூட்டி விமர்சிக்கின்றார்கள். 'ஆவா' குழு உறுப்பினர்களாகவும் கஞ்சாக் கடத்தல்காரர்களாகவும் தற்போது கஜன்கள் அணியால் அடையாளப்படுத்தப்படும் இளைஞர்கள், கடந்த காலங்களில் கஜன்களின் ஆதரவாளர்களாக, ஒரு வகையில் பாதுகாப்பு படை போல அவர்களைச் சூழ இருந்தவர்கள்.

இப்படியான குறைபாட்டுச் சிந்தனையும் வறட்டுவாதமும் செய்யும் கஜன்கள் அணியினர்தான், கடந்த வாரம் தங்களின் இரு வேறு நிலைப்பாடுகளால் விமர்சனத்துக்கு உள்ளானார்கள்.

கடந்த மாத இறுதியில், வத்திராயன் பகுதி மீனவர்கள் இருவர் தொழிலுக்குச் சென்ற நிலையில், நான்கு நாள்களின் பின்னர் சடலங்களாக கரை ஒதுங்கினர். அவர்களின் மரணம், அத்துமீறி மீன்பிடியில் ஈடுபடும் இந்திய இழுவைப் படகுகளால் நிகழ்த்தப்பட்டதாக மீனவ அமைப்புகள் குற்றஞ்சாட்டி, தொடர் போராட்டங்களில் ஈடுபட்டன.

அந்த நிலையில், பாராளுமன்றத்தில் ஏற்கெனவே நிறைவேற்றப்பட்டுள்ள இழுவை மடி தடைச் சட்டத்தை, நடைமுறைப்படுத்தக் கோரும் சபை ஒத்திவைப்புப் பிரேரணையை கொண்டுவர, தமிழ்த் தேசிய கூட்டமைப்பு தீர்மானித்தது. ஆனால், அவ்வாறான பிரேரணை ஒன்றைக் கொண்டுவர, முன்னணியின் கஜன்கள் முயன்ற போது, அதற்கான ஆதரவை வழங்கி, அதில் கலந்து கொண்டு பேசும் முடிவை கூட்டமைப்பு எடுத்தது.

ஆனால், அந்த ஒத்திவைப்புப் பிரேரணை விவாதத்துக்கு எடுக்கப்படவிருந்த நாளில், சபாநாயகருக்கு கடிதம் ஒன்றின் மூலம், குறித்த பிரேரணையை மீளப்பெறுவதாக கஜேந்திரன் அறிவித்தார். அதற்கான காரணமாக, வடக்கு மீனவர்கள் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு, இந்திய தூதரக அதிகாரி, தொலைபேசியில் வாக்குறுதி அளித்திருப்பதாக கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார்.

கடந்த காலங்களில், தென்னிலங்கையின் கட்சிகள், அமைப்புகளிடமோ இந்தியா, அமெரிக்கா, மேற்கு நாடுகள் உள்ளிட்ட தரப்புகளிடமோ பேச்சுவார்த்தைகளில் ஈடுபடும் கூட்டமைப்பு உள்ளிட்ட எந்தத் தரப்பை நோக்கியும், பேச்சுகளின் முடிவில் எழுத்து மூல உத்தரவாதத்தைக் கோரவில்லை என்று முன்னணி விமர்சித்து வந்திருக்கின்றது.

ஜனாதிபதி தேர்தலில் மைத்திரிபால சிறிசேனவுக்கு கூட்டமைப்பு ஆதரவளித்த தருணத்தில், எழுத்து மூலமான உத்தரவாதம் வாங்கப்படவில்லை என்கிற விடயம், கடந்த பொதுத் தேர்தலில், முன்னணியால் பெரும் பிரசாரமாகவே முன்னெடுக்கப்பட்டது.

அப்படியான முன்னணி, தூதரக அதிகாரி ஒருவரின் தொலைபேசி அழைப்பில், வடக்கு மீனவர்களின் பிரச்சினை தீர்க்கப்பட்டுவிடும் என்ற நிலைப்பாட்டுக்கு எப்படி வந்தது என்ற கேள்வி எழுகின்றது? அதுவும், முன்னணியை இந்திய தூதர் அழைத்துப் பேசவில்லை; மாறாக, தூதரக அதிகாரி ஒருவரே பேசியிருக்கின்றார். அந்த அதிகாரி, இந்திய தூதரகத்தில் எந்தத் தரநிலையில் இருக்கின்றார் என்ற விடயம் கூறப்படவில்லை. இந்த விடயத்தை, கஜேந்திரகுமாரிடம் ஊடகங்கள் கேள்வியாக எழுப்பினால், "உத்தரவாதமளித்துவிட்டார்கள்; அதனால் நாங்கள் பிரேரணையை கைவிட்டோம். எழுத்துமூலம் எல்லாம் உத்தரவாதத்தை எப்படிக் கோர முடியும்" என்கிற தோரணையில் பதலளிக்கின்றார்.

இவ்வாறான நடவடிக்கையில் இன்னொரு தரப்பு ஈடுபட்டிருந்தால் துரோகி, கைக்கூலி ஆகிய பட்டங்களோடு, கஜன்கள் ஊடக சந்திப்புகளை நடத்தியிருப்பார்கள். அதுபோலவே, விடுதலைப் புலிகள் தனிநாடு கோரிப் போராடவில்லை என்கிற பொய்யை, இன்னொரு தரப்பினர் சொல்லியிருந்தால், "மாவீரர்களின் தியாயத்தைக் கொச்சைப்படுத்தி விட்டார்கள்" என்று கூறியிருப்பார்கள்.

புலிகள், தனி நாட்டுக்கான அர்ப்பணிப்போடு போராடினார்கள். சமாதானப் பேச்சுவார்த்தைகளின் போது, வடக்கு-கிழக்கு தமிழர் தாயகம் எனும் தேசக் கோட்பாட்டு அதிகாரப் பகிர்வு நிலை குறித்துப் பேசியிருக்கின்றார்கள். ஆனால், அவர்களின் இறுதி இலக்கு என்பது, சுயநிர்ணயம் சார்ந்தது. அது தமிழீழ தாயகம் என்றவாறாகவே இருந்தது. போராட்டத்தில் மக்களை இணையக் கோரிய போதெல்லாம் புலிகள், தனிநாட்டுக்காகவே அர்ப்பணிக்கக் கோரினார்கள்.

அப்படியான நிலையில், ஏட்டிக்குப் போட்டியாகப் பேச வேண்டும் என்பதற்காக கஜேந்திரன், "புலிகள் தனிநாடு கோரவில்லை" என்று கூறியவிடயம் சர்ச்சையானதும் ஊடக அறிக்கை என்கிற பெயரில், நிறைந்த எழுத்துப் பிழைகள், தகவல் பிழைகளுடன் மன்னிப்புக் கோரும் அறிக்கையை சமூக ஊடகங்களில் வெளியிட்டு விடயத்தை சமாளிக்க முயன்றிருக்கிறார். மாறாக, திறந்த மனதோடு மன்னிப்புக் கோரும் முகமாக, அதைப் பார்க்க முடியவில்லை.

துரோகி அடையாளத்தை மற்றவர்களுக்கு சூட்டுவதற்கான அதிகாரத்தைக் கொண்டவர்கள் போல, எடுத்ததற்கெல்லாம் துரோகி பட்டத்தை சூட்டிய முன்னணியின் கஜன்கள்தான், இன்றைக்கு தங்களின் 'பல்லிளிக்கும்' அரசியலை கமுக்கமாகக் கடக்க நினைக்கிறார்கள்.

## கடிதங்கள்

### ஜமாஹிரியா வீதியில் உடைந்த வடிகான் மூடிகளால் ஆபத்து

கல்முனை மாநகர சபை எல்லைக்கு உட்பட்ட சாய்ந்தமருது, ஜமாஹிரியா வீதியில், வடிகானுக்கு மேலாகப் போடப்பட்ட மூடிகள் உடைந்து, போக்குவரத்துக்கு மிகவும் இடைஞ்சலாகவும் ஆபத்தாகவும் இருப்பதாக, பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர்.

சுமார் ஒரு வருடத்துக்கு மேலாக உடைந்து காணப்படும் இந்த மூடிகள் தொடர்பாக, சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பலமுறை அறிவிக்கப்பட்டும் எந்தவொரு நடவடிக்கையும் இதுவரை எடுக்கப்படவில்லை.

இவ்வீதியை, கல்முனை ஸாஹிரா தேசிய கல்லூரியில் கல்வி பயிலும் ஆயிரக்கணக்கான மாணவர்களும் நூற்றுக்கணக்கான ஆசி ரியர்களும் பொதுமக்களும் தினசரி பயன்படுத்தி வருகின்றனர். வடிகான் மூடி உடைந்து காணப்படுவதால், இரவு வேளையில் பலர் கானில் விழுந்து உபாதைக்கு உள்ளாகியுள்ளனர்.

இவ்விடயத்தில், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அதியுச்ச கவனம் எடுத்து, சாய்ந்தமருது, ஜமாஹிரியா வீதியில் ஆபத்தில்லாமல், பொதுமக்கள் பயணிக்க வழிசெய்ய வேண்டும் எனப் பிரதேசவாசிகள் கேட்டுள்ளனர்.

அஸ்ஹர் இப்றாஹிம்



மும்பை

பிரபல இசையமைப்பாளர்

# ‘பப்பி லஹரி’ காலமானார்



பிரபல பொலிவூட் இசையமைப்பாளரும், பாடகருமான பப்பி லஹரி தனது 69 ஆவது வயதில் மும்பையில் நேற்று முன்தினம் (15) இரவு காலமானார்.

உடல் நலக்குறைவு காரணமாக மும்பையில் உள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில், சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர் தமிழில் ‘அபூர்வ சகோதரிகள்’, ‘பாடும் வானம்பாடி’, ‘கிழக்கு ஆபிரிக்காவில் ஷீலா’ ஆகிய படங்களுக்கு இசையமைத்துள்ளார். இந்நிலையில் இவரது மரணமானது, இந்தியத் திரையுலகையும் அவரது இரசிகர்களையும் பெரும் சோகத்தில் ஆழ்த்தியுள்ளது.



மைசூர்

# பட்டுச் சேலை அணிந்து உணவு பரிமாறும் ‘ரோபோ’

மைசூரில் உள்ள பிரபல உணவகமான ‘சித்தார்த்தா’வில், பட்டுச் சேலை அணிந்து ரோபோவொன்று வாடிக்கையாளர்களுக்கு உணவு பரிமாறி வருவது அனைவரது கவனத்தையும் ஈர்த்துள்ளது,

குறித்த ரோபோவை இந்திய மதிப்பில் 2,50,000 ரூபாய்க்கு வாங்கியுள்ளதாக அவ் உணவகத்தின் உரிமையாளர் தெரிவித்துள்ளார்.

இந்த ரோபோவுக்கு வாடிக்கையாளர் மத்தியில் வரவேற்பு இருந்தாலும் ஒருசிலர், “நாம் கேட்டதும் கொண்டு வரும் உணவக ஊழியர்கள் போல், ரோபோவால் ஓடோடி வர முடியாது” என்றும், “இன்முகத்துடன் வரவேற்கும் கொட்டல் ஊழியர்கள் உணவு பரிமாற இல்லாதது குறையாக உள்ளது” என்றும் கருத்து தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், இது குறித்த புகைப்படங்கள் இணையத்தில் வெளியாகி வைரலாகி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



திருத்தணி:

# மூதாட்டியின் உடல் நீரில் விழுந்ததால் பரபரப்பு

இறந்த மூதாட்டியொருவரின் சடலத்தை அடக்கம் செய்வதற்காக, கால்வாய் ஒன்றினூடாகக் கொண்டு சென்ற போது, அவரது உடல் நீரில் விழுந்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

திருத்தணியில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. சுமார் 300 க்கும் மேற்பட்ட வீடுகள் உள்ள இப்பகுதியில் ஆற்றின் அருகே சுடுகாடு உள்ளதாகவும், எனினும் அப்பகுதியை சிலர் ஆக்கிரமிப்பு செய்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து அவர்கள் பலமுறை உரிய அதிகாரிகளிடம் மனு கொடுத்தும், யாரும் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. இந்நிலையில், அக் கிராமத்தைச் சேர்ந்த சின்னப்பொண்ணு எனும் மூதாட்டியின் சடலத்தை, அவரது உறவினர்கள் அப்பகுதியினூடாகக் சொண்டு செல்ல முடியாமல் கால்வாய் வழியாக எடுத்துச் சென்றதாகவும், இதன்போது எதிர்பாராதவிதமாக சடலம் தவறி, தண்ணீரில் விழுந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், இதனால் அப்பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டதாகவும் அதன் பின்னர் தண்ணீரில் தத்தளித்தபடி சடலத்தை இழுத்துக் கொண்டு சுடுகாட்டில் அடக்கம் செய்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.



உத்தரப்பிரதேசம்

# 5 ஆண்டுகளுக்கு மின் சலுகை

“உத்தரப்பிரதேசத்தில் பாரதிய ஜனதா கட்சி மீண்டும் ஆட்சி அமைத்தால், 5 ஆண்டுகளுக்கு விவசாயிகள் மின் கட்டணம் செலுத்த வேண்டியதில்லை” என மத்திய உட்துறை அமைச்சர் அமித்ஷா அறிவித்துத்துள்ளார்.

திபியபுரில் அண்மையில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பேசியபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர்மேலும் தெரிவிக்கையில்: மார்ச் மாதம் 10 ஆம் திகதி தேர்தல் முடிவு அறிவிக்கப்படும் போது, பா.ஜ.க வெற்றி பெற்றால் 18ஆம் திகதி ஹோலி பண்டிகையின் போது, இலவச எரிவாயு சிலிண்டர்கள் வீடுகளுக்கு விநியோகம் செய்யப்படும் என்றார்.

ஏழு கட்டங்களாக சட்டமன்ற தேர்தல் நடைபெறும் உத்தரப்பிரதேசத்தில், மூன்றாவது கட்ட வாக்குப்பதிவு 20 ஆம் திகதி நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



கேரளா

# காதலர் தினத்தில் கரங்கோர்த்த திருநங்கைகள்

ஐந்து ஆண்டுகளாக தீவிரமாகக் காதலித்து வந்த திருநங்கைகள் காதலர் தினத்தன்று திருமணம் செய்து கொண்ட சம்பவம் கேரளாவில் இடம்பெற்றுள்ளது.

கேரளாவின் திருச்சூர் சாலக்குடியை சேர்ந்தவர் மனு கார்த்திகா. திருவனந்தபுரத்தை சேர்ந்தவர் சியாமா. இவர்கள் இருவரும் திருநங்கைகள் ஆவர். மனு கார்த்திகா திருவனந்தபுரத்திலுள்ள தகவல் தொழில்நுட்ப நிறுவனத்தில் மனிதவள மேம்பாட்டுதுறையில் செயல் அதிகாரியாக பணியாற்றி வருகிறார். சியாமா, கேரள சமூக நலத்துறையில் திருநங்கையருக்கான பிரிவில் ஒருங்கிணைப்பாளராக பணியாற்றி வருகிறார்.

இந்நிலையில், இவர்கள் இருவரும் 2017ஆம் ஆண்டு முதல் தீவிரமாகக் காதலித்து வந்துள்ள நிலையில், பெற்றோர் சம்மதத்துடன் காதலர் தினத்தன்று மனு கார்த்திகா ஆணாகவும், சியாமா பெண்ணாகவும் ஆடை அணிந்து திருமணம் கொண்டனர்.

இத்திருமணத்தில் அடையாள ஆவணங்களின்படி இருவரும் ‘திருநங்கையர்’ என பதிவு செய்து கொண்டனர். திருநங்கையர் எனப் பதிவு முதல் திருமணம் இதுவாகும். .

இது குறித்து அவர்கள் மேலும் தெரிவிக்கையில் “சட்டப்படி எங்களது திருமணத்தைப் பதிவு செய்ய முடியாது. எனவே, இது தொடர்பாக அரசு மற்றும் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்ய முடிவு செய்து உள்ளோம்” என்றனர்.

அரியானா

# பிரபல நடிகர் தீப் சித்து விபத்தில் மரணம்

## சோகத்தில் ரசிகர்கள்




பிரபல பஞ்சாபி நடிகரும் சமூக ஆர்வலருமான தீப் சித்து, அரியானா மாநிலம் சோனிபட் அருகே நேற்று முன்தினம் இரவு (15) இடம்பெற்ற கார் விபத்தில் சிக்கி உயிரிழந்துள்ளார்.

தீப் சித்து பயணித்த கார், வேகக்கட்டுப்பாட்டை இழந்து, வீதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கனரக வாகனமொன்றுடன் மோதியதாலேயே இந்த விபத்து சம்பவித்துள்ளது.

இந்நிலையில், படுகாயமடைந்த தீப் சித்து, உடனடியாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நிலையில், சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

தீப் சித்து, கடந்த ஆண்டு புதுடெல்லியில் விவசாயிகள் நடத்திய டிராக்டர் பேரணியில் வெடித்த கலவரத்தில், செங்கோட்டையில் அத்துமீறி சீக்கிய மதக் கொடியை சிலர் ஏற்றியமை தொடர்பில் , போராட்டத்தைத் தூண்டிய வழக்கில் குற்றம் சுமத்தப்பட்டு அண்மையில் பிணையில் வெளியே வந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் அவரது மரணம், பொலிவூட் திரையுலகையும் அவரது இரசிகர்களையும் சோகத்தில் ஆழ்த்தியுள்ளது.



# பொகவந்தலாவை ஸ்ரீ தண்டாயுதபாணி இரதோற்சவம்

பொகவந்தலாவை நகர் ஸ்ரீ தண்டாயுதபாணி சுவாமி கோவிலின் மகோற்சவம், நேற்று பௌர்ணமி தினத்தில் தீர்த்தோற்சவத்துடன் நிறைவு பெற்றது. இரதோற்சவம் நேற்று முன்தினம் (15) நடைபெற்றது.

‘ஈழத்து பழனி’ எனப் போற்றப்படுகின்ற பொகவந்தலாவை நகர் ஸ்ரீ தண்டாயுதபாணி சுவாமி கோவில் மகோற்சவ பெருவிழாவின் இரதோற்சவ தினம், சர்வ அலங்காரங்களுடன் வீற்றிருந்த விநாயகப்பெருமான், வள்ளி தெய்வயானை சமேத சண்முகப் பெருமான், ஸ்ரீ இராஜ இராஜேஸ்வரி அம்பாள் ஆகிய மூர்த்திகளுக்கு சிறப்பு தீபாராதனையுடன் வேத மந்திர, திருமுறை பாராயணம், நாட்டியாஞ்சலி என்பன சிறப்பாக நடைபெற்று, மும்மூர்த்திகளும் உள்வீதி எழுந்தருளி ‘ஹெந்த’ உற்சவம் நடைபெற்றது.

உற்சவ மூர்த்திகள் பொகவந்தலாவை நகருக்கு எழுந்தருளினர். பக்தர்கள் வடம் பிடித்து இழுக்க இரதம் பவனி வந்து.

(படமும் தகவலும்: துவாரகஷான்)



# பாற்குட பவனி...

ஹட்டன், பண்டாரநாயக்க நகரில் எழுந்தருளியுள்ள அருள்மிகு மாவடி ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவிலின், 44ஆவது வருட மாசிமக திருவிழாவை முன்னிட்டு, பௌர்ணமி தினமான நேற்று (16) பாற்குட பவனி மிகச் சிறப்பாக நடைபெற்றது.

(படமும் தகவலும்: மலைவாஞ்ஞன்)

# தீ மிதிப்பு...

மாத்தளை ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தின் தீ மிதிப்பு உற்சவம், நேற்று (16) நடைபெற்றது. இன்றையதினம் தேர் உற்சவம் இடம்பெறும்

(படமும் தகவலும்: ரவிந்திர விராஜ் அபயசிறி)





# பௌர்ணமி தினத்தில் சிவலிங்க பீடத்துக்கு அடிக்கல்



சோழர் காலத்தில் நிர்மாணிக்கப்பட்டு, தற்போது தூர்ந்து, சிதைந்து காணப்படும் மடத்தடி சிவன் கோவில் முன்றலில், சிவலிங்கம் நிறுவுவதற்கான பீடமொன்றுக்கு அடிக்கல்நடும் வைபவம் பௌர்ணமியன்று (16) நடைபெற்றது. கூடவே அருகிலுள்ள மடத்தடி ஸ்ரீ மீனாட்சி அம்மன் கோவிலில் புதிதாக அம்மன் அன்னதான மண்டபத்தை அமைப்பதற்கான அடிக்கல் நடுவிழாவும் நேற்றைய பௌர்ணமி தினத்தில் நடைபெற்றது.

‘சிவனருள் பவுண்டேசன்’ ஆதரவில் ஆலயத்தலைவர் கி. ஜெயசிறில் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர் கலாநிதி எம். கோபாலரெத்தினம், மட்டக்களப்பு ஆதீன ஸ்தாபக இயக்குநர் மு.ஜெயபாலன், ‘சிவனருள் பவுண்டேஷன்’ தலைவர் பேராசிரியர் அனுசியா சேனாதிராஜா, ‘சிவனருள் பவுண்டேசன்’ நிறுவன மாவட்டச் செயலாளர் கே. வாமதேவன், ஆலய பரிபாலன சபை ஆலோசகர்களான வி.ரி. சகாதேவராஜா, வா. குணாளன், வ. ஜெயந்தன் மாவட்ட கலாசார உத்தியோகத்தர் கு.ஜெயராஜி உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டு அடிக்கல் நாட்டினர். இதேவேளை, மடத்தடி மீனாட்சி அம்மன் கோவிலில் விசேட பௌர்ணமி பூஜையும் அட்டப்பளம் அறநெறி மாணவர்களின் விசேட பஜனையும் நற்சிந்தனையும் நடைபெற்றன. தொடர்ந்து, அடியார்கள் சங்கமம் பௌர்ணமி ஒன்றுகூடலும் பொங்கிப்படைத்து அன்னதானம் வழங்கி அம்மனை வழிபட்டனர்.

(படங்களும் தகவலும்: காரைதீவு நிருபர் சகா)



உக்ரைன்

# பதுங்கு குழிகளை தோண்டும் இளைஞர்கள்

ரஷ்யாவுக்கும் உக்ரைனுக்கும் இடையே பல ஆண்டுகளாக எல்லைப் பிரச்சினை காணப்பட்டு வருகின்றது.

குறிப்பாக, உக்ரைனுக்குச் சொந்தமான கிரிமியா தீபகற்பத்தை, 2014ஆம் ஆண்டு ரஷ்யா கைப்பற்றியதைத் தொடர்ந்து, இரு நாடுகளுக்கும் இடையிலான மோதல் போக்கானது மேலும் தீவிரமடைந்துள்ளது.

இந்நிலையில் அண்மைக்காலமாக உக்ரைன் எல்லையில் ரஷ்யா தனது படைகளைக் குவித்து வருவதால், உக்ரைன் மீது ரஷ்யா எப்போது வேண்டுமானாலும் படையெடுக்கலாம் என்ற அச்சம் காணப்படுவதால் உக்ரைன் இளைஞர்கள், சிறுவர்கள் இணைந்து, அந்நாட்டு வீரர்களுக்காகப் பதுங்கு குழிகளைத் தோண்டி வருவதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

அத்துடன், தாம் இரவில் உறக்கமின்றி தவித்ததாகவும், தங்கள் வீரர்களுக்கு உதவவேண்டும் என்பதற்காகவே இப் பணியில் தாங்கள் ஈடுபடுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சீனா

## சீன செயலியால் மகிழ்ச்சி



சீனத் தலைநகர் பீஜிங்கில் குளிர்கால ஒலிம்பிக் தொடரானது நடைபெற்று வரும் நிலையில், போட்டிகளில் பங்கேற்றுள்ள வெளிநாட்டவர்களைக் கருத்தில் கொண்டு, சீன அரசு புதிய செயலியொன்றை அறிமுகப்படுத்தியுள்ளது.

அதாவது, சீனாவின் தாய்மொழியான மண்டரின் மொழி தெரியாத தொழில்நுட்ப வல்லுனர்களின் நலன் கருதி செயலியொன்றை சீன அரசு அறிமுகப்படுத்தியுள்ளது.

இச்செயலியின் மூலம் வெளிநாட்டவர்கள் பேசும் சொற்கள், சீன மொழியான மண்டரினுக்கு ஒலிவடிவில் மொழிமாற்றம் செய்யப்படுவதோடு, மண்டரினின் மொழியில் பேசுபவர்களை தமது மொழிகளுக்கு மொழிமாற்றம் செய்து இலகுவாக தொடர்பாடலை மேற்கொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இச் செயலியை சர்வதேச விளையாட்டு வீரர்கள், பயிற்சியாளர்கள், பத்திரிகையாளர்கள், தொழில்நுட்ப வல்லுனர்கள் எனப் பலரும் பயன்படுத்தி வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சீனாவிலேயே உருவாக்கப்பட்ட ஐ-ஃப்ளைடெக் ஜார்விசென் (iFLYTEK Jarvisen) என்ற செயற்கை நுண்ணறிவு மூலம், இச் செயலி பயன்படுத்தப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நியூசிலாந்து

## இணையத்தில் வைரலாகும் `பேய் சுறா`



நியூசிலாந்தைச் சேர்ந்த நீரியல் ஆய்வாளர்கள் அண்மையில் 'பேய் சுறா' என அழைக்கப்படும், பார்ப்பதற்கு மிகவும் விசித்திரமாகக் காட்சியளிக்கும் அரிய வகை மீனினமொன்றைக் கண்டுபிடித்துள்ளனர்.

நீருக்கு அடியில் மேற்கொண்ட ஆராய்ச்சியின் போதே, எதிர்பாராத விதமாக இம்மீன் கண்டுபிடிக்கப்பட்டதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

'சிமேரா' என அழைக்கப்படும் இவ்வகை பேய் சுறாக்கள் கடலில் ஆழத்தில் காணப்படுவதாகவும், அவற்றின் குட்டிகளைப் பார்ப்பது அரிதிலும் அரிதான விடயமெனவும் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் இது குறித்து வெளியான புகைப்படங்கள் இணையத்தில் வைரலாகி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

அமெரிக்கா

## 73 வயதில் கரம் பிடித்த மூதாட்டி



கணவரைப் பிரிந்த மூதாட்டியொருவர், 73 வயதில் தனது காதலனை கரம் பிடித்த சம்பவம் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.


அமெரிக்காவில் வசிக்கும் கரோல் எச்.மேக் என்பவரே இவ்வாறு தனது காதலனைக் கரம்பிடித்துள்ளார். இது குறித்து அவர் தனது டுவிட்டர் பக்கத்தில் வெளியிட்ட பதிவில், '40 ஆண்டுகால திருமண வாழ்க்கைக்கு பிறகு 73ஆவது வயதில் இந்த நிலைமைக்கு வந்துள்ளேன்.

40 ஆண்டுகால திருமண வாழ்க்கைக்குப் பிறகு, கணவர் ஏமாற்றியதால் கடந்த மூன்று ஆண்டுகளுக்கு முன்னரே அவரை விவாகரத்து செய்து விட்டேன். அதன் பிறகு மூன்று ஆண்டுகள் வேறு ஒரு நபரை சந்தித்து அவருடன் காதலில் விழுந்தேன். தற்போது மோதிரம் மாற்றி, திருமணம் செய்து கொண்டேன்' எனக் குறிப்பிட்டுள்ளார். மேலும், அவர் தனது திருமண மோதிரத்தையும் புகைப்படம் எடுத்தும் பதிவேற்றியுள்ளார்.

இந்நிலையில் அவர் வெளியிட்ட பதிவானது இணையத்தில் வைரலாகி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

பிரித்தானியா

## 'லஸ்ஸா'வால் அச்சத்தில் உலக நாடுகள்



'லஸ்ஸா` (lassa) எனப்படும் புதிய வகை நோய்பரவலானது உலகநாடுகளை அச்சத்தில் ஆழ்த்தியுள்ளது.

லஸ்ஸா எனப்படும் வைரஸால் பரவிவரும் இந்நோய்த்தொற்றால் பிரித்தானியாவிலுள்ள ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் பாதிக்கப்பட்டிருந்த நிலையில், அதில் ஒருவர் கடந்த 11 ஆம் திகதி உயிரிழந்துள்ளமை, அந்நாட்டு மக்களிடையே அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. மேலும் இம் மூவரும் அண்மையில் மேற்கு ஆபிரிக்காவுக்குச் சென்று வந்துள்ளனர் என்றும் கூறப்படுகிறது.

அத்துடன் இந் நோய்த்தொற்றானது எலிகளின் மலம், சிறுநீர் மூலம் பரவுகிறது எனவும் சில சந்தர்ப்பங்களில், நோய்த் தொற்று கண்கள், வாய், மூக்கு போன்ற பாதிக்கப்பட்ட நபரின் சளி சவ்வுகளின் தொடர்பு மூலமாகவும் பரவுகிறது எனவும் மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் லஸ்ஸா காய்ச்சல் தொற்று ஏற்பட்டவர்களின் 80 சதவீதமானவர்கள் அறிகுறிகள் அற்றவர்களாக இருப்பதால், இவர்களை கண்டறிவதும் கடினம் எனவும், நோய் தீவிரமாக இருந்தால் மருத்துவமனையில் சேர்த்து சிகிச்சை அளிக்கப்பட வேண்டும் எனவும் நோய் தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டுக்கான ஐரோப்பிய மையம் அறிவுறுத்தியுள்ளது.

மேலும், இந்நோயால் பாதிக்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுபவர்களில் 15 சதவீதம் பேர் வரை இறக்கலாம் என மருத்துவர்கள் அச்சம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

நியூசிலாந்து

## 13 மாணவிகள் மீது பாலியல் வன்கொடுமை

### ஆசிரியருக்கு ஆயுள் தண்டனை

13 மாணவிகளை பாலியல் வன்கொடுமை செய்த வழக்கில், ஆசிரியர் ஒருவருக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட சம்பவம் இந்தோனேஷியாவில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்தோனேஷியாவின் மேற்கு ஜாவா பகுதியில் அமைந்துள்ள பாடசாலையொன்றைச் சேர்ந்த ஆசிரியர் ஒருவருக்கே, இவ்வாறு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

குறித்த ஆசிரியரால் பாதிக்கப்பட்ட மாணவியொருவர் கர்ப்பமடைந்த நிலையில், இது குறித்து அம்மாணவியின் தந்தை பொலிஸ் நிலையத்தில் புகார் கொடுத்தமையை அடுத்தே இவ்விடயம் அம்பலமாகியுள்ளது.



சம்பியன்ஸ் லீக்: இறுதி நேரத்தில்

# றியல் மட்ரிட்டை வென்ற பரிஸ் ஸா ஜேர்மைன்

சம்பியன்ஸ் லீக் தொடரின் இறுதி 16 அணிகளுக்கு இடையிலான, பிரெஞ்சு லீக் 1 கழகமான பரிஸ் ஸா ஜேர்மைனின் மைதானத்தில் நடைபெற்ற அவ்வணியுடனான முதலாவது சுற்றுப் போட்டியில் 0-1 என்ற கோல் கணக்கில் ஸ்பானிய லா லிகா கழகமான றியல் மட்ரிட் தோற்றது.

ஐரோப்பிய கால்பந்தாட்டச் சங்கங்களின் ஒன்றியத்தின் விலகல் முறையிலான இச்சுற்றுப் போட்டியின் இறுதி நேரத்தில் நெய்மரிடமிருந்து பெற்ற பந்தை கிலியான் மப்பே கோலாக்கியதன் மூலமே பரிஸ் ஸா ஜேர்மைன் வென்றிருந்தது.

பந்துவீச்சாளர்களின் தரவரிசையில்

## இரண்டாமிடத்துக்கு முன்னேறிய ஹேசில்வூட்



சர்வதேச கிரிக்கெட் சபையின் இருபதுக்கு - 20 சர்வதேசப் போட்டிகளுக்கான பந்துவீச்சாளர்களின் தரவரிசையில் இரண்டாமிடத்துக்கு அவுஸ்திரேலியாவின் வேகப்பந்துவீச்சாளர் ஜொஷ் ஹேசில்வூட் முன்னேறியுள்ளார்.

இலங்கைக்கெதிரான முதல் மூன்று போட்டிகளில் எட்டு விக்கெட்டுகளைக் கைப்பற்றியதைத் தொடர்ந்தே ஆறாமிடத்திலிருந்து நான்கு இடங்கள் முன்னேறி இரண்டாமிடத்தை ஹேசில்வூட் அடைந்துள்ளார்.

முதல் 10 பந்துவீச்சாளர்களின் தரவரிசை பின்வருமாறு,

தப்ரையாஸ் ஷம்சி, 2. ஜொஷ் ஹேசில்வூட், 3. வனிடு ஹஸரங்க, 4. அடில் ரஷீட், 5. அடம் ஸாம்பா, 6. ரஷீட் கான், 7. முஜீப் உர் ரஹ்மான், 8. அன்றிச் நொர்ட்ஜே, 9. ஷடாப் கான், 10. டிம் செளதி.

முதல் 10 துடுப்பாட்டவீரர்களின் தரவரிசை பின்வருமாறு,

பாபர் அஸாம், 2. மொஹமட் றிஸ்வான், 3. ஏய்டன் மார்க்ரம், 4. லோகேஷ் ராகுல், 5. டேவிட் மலான், 6. டெவோன் கொன்வே, 7. ஆரோன் பின்ஞ், 8. றஸி வான் டர் டுஸன், 9. மார்டின் கப்தில், 10. விராட் கோலி.

முதல் ஐந்து சகலதுறைவீரர்களின் தரவரிசை பின்வருமாறு,

மொஹமட் நபி, 2. ஷகிப் அல் ஹஸன், 3. மொயின் அலி, 4. கிளென் மக்ஸ்வெல், 5. வனிடு ஹஸரங்க.



பள்ளிவாசல்துறை லிவர்பூல் விளையாட்டுக் கழகத்தின்

## கரப்பந்தாட்டத் தொடர்

அஸ்ஹர் இப்றாஹீம்

பள்ளிவாசல்துறை லிவர்பூல் விளையாட்டுக் கழகம், தமது கழகத்தின் சிரேஷ்ட வீரர்களைக் கௌரவிக்கும் வகையிலும், அப்பிரதேசத்தில் இலங்கையின் தேசிய விளையாட்டான கரப்பந்தாட்டத்தை பிரபல்யப்படுத்தும் வகையிலும் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த கரப்பந்தாட்டத் தொடரானது பள்ளிவாசல்துறை பொது கரப்பந்தாட்ட மைதானத்தில் பகல் இரவு போட்டியாக அண்மையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இத்தொடரில் கழகத்தின் சிரேஷ்ட உறுப்பினர்கள் மூன்று அணிகளாக பிரிக்கப்பட்டும் தற்போது உள்ள கனிஷ்ட அங்கத்தவர்களை மூன்று அணிகளாகவும் பிரித்தும் போட்டிகள் நடாத்தப்பட்டன.

சிரேஷ்ட உறுப்பினர்களுக்கான போட்டியில் ஆர்.டீ. பி அணியினர் சம்பியன் கிண்ணத்தை சுவிகரித்துக் கொண்டனர்.

## இறக்காமத்தில் மறைந்துள்ள விளையாட்டு திறன்களை இனங்காணல்



அப்துல் பாஸித்

விளையாட்டுத் திறன்களைக் கொண்ட விளையாட்டு வீர, வீராங்கனைகள் கிராமிய மட்டத்தில் தோற்றம் பெறுவார்களாயினும், அவர்களின் திறன்களை இனங்காணுவதற்கும், அபிவிருத்தி செய்வதற்கும் பொருத்தமான முறைமையொன்று நடைமுறைப்படுத்தப்படாமையால் விளையாட்டு வீர. வீராங்கனைகள் விளையாட்டுகளில் முன்னோக்கிச் செல்ல முடியாத நிலை அவதானிக்கப்பட்டுள்ளது.

அதன்பிரகாரம் நாடு முழுவதும் பரந்து வதியும் இயற்றிறன்களால் நிறைந்த பிள்ளைகளை இனங்கண்டு, விஞ்ஞான முறைமைகளுக்கு ஏற்ப தேசிய மற்றும் சர்வதேச வெற்றிகளை இலக்காகக் கொண்டு விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் ஊடாக அமல்படுத்தப்படும் திறன்களை இனங்காணும் நிகழ்ச்சித்திட்டத்தை நாடு முழுவதும் ஆரம்பிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

விஷேட தேவையுடைய விளையாட்டு வீர, வீராங்கனைகள் மீதும் விஷேட கவனம் செலுத்தப்படவுள்ளது. கிராம உத்தியோகத்தர் பிரிவு, பிரதேச செயலகப் பிரிவு, மாவட்ட மட்டம் ஆகிய மூன்று கட்டங்களாக இத்தெரிவு நடைபெறவுள்ளது.

இதனடிப்படையில் இறக்காமம் 1, 3, 4, 5, 6, 7, 8, 9 ஆகிய பிரதேச செயலக பிரிவுகளுக்கான வீர, வீராங்கனைகளை தெரிவுப் பரிசோதனைகள் அண்மையில் இறக்காமம் அஷ்ரப் தேசிய பாடசாலை மைதானத்தில் இடம்பெற்றது. இம் முதலாம் கட்டத் தெரிவில் கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் விளையாட்டில் ஈடுபட்டுள்ள விளையாட்டு வீர, வீராங்கனைகளை மற்றும் விளையாட்டில் ஈடுபட்டுள்ள வீரர்கள் இனங்காணப்பட்டு மாவட்ட, மாகாண மற்றும் தேசிய மட்டத்திற்கு வீரர்கள் தெரிவு செய்யப்பட உள்ளனர்.

பிரதேச மட்ட வீரர்களை தெரிவு செய்யும் முதலாம் கட்ட தெரிவுகள் கிராம உத்தியோத்தர்களுக்கான நிர்வாக உத்தியோகத்தர் எச்.பி. யசரட்ன தலைமையில் இடம்பெற்றது.

மேலும் இறக்காமம் 03, 04, 06, 07, 08, 09 ஆகிய பிரதேச செயலக பிரிவுகளின் கிராம உத்தியோகத்தர்களான யூ.எல். அமீர், எம்.எல். கிஷோர் ஜஹான், எஸ்.எல். ஹம்ஷா, எம்.ஜே.எம். அத்தீக் ஆகியோர் கலந்துகொண்டு தங்கள் பிரிவு வீரர்களை ஒருங்கிணைத்தனர்.



ஜயகுமார் ஷான்



# மஞ்சு தவழும் மாத்தளையில்...

இலாங்காபுரியில் மத்திய ஸ்தானத்தில் சைவமும் தமிழும் தளைத்தோங்க முன்நிற்கும் மாத்தளை மாநகரப் பகுதியில், உருவத்திருமேனி கொண்டு திவ்ய சிம்மாசனத்தில் எழுந்தருளி இருக்கும் அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்பாளுக்கு இன்று (17) வியாழக்கிழமை இரதோற்சவம் நடைபெறுகிறது. அத்துடன், சனிக்கிழமை (19) காலை தீர்தோற்சவமும் இரவு துவஜ அவரோகனமும் (கொடியிறக்கம்) நடக்க திருவருள் கூடியிருக்கிறது.

## கோவில் அமைவிடம்

இயற்கை எழில் தவழ்ந்து விளையாடும் மத்திய மலைநாட்டில், கண்டியிலிருந்து 30 கிலோ மீற்றர் தொலைவில் மூவின மக்களும் வாழும் மாத்தளை மாநகரின் மத்தியில், ஆகாயத்தை எட்டிப்பிடிக்கும் வண்ணம் தென்னிந்திய கலைப்பாணியில், சிற்ப வேலைப்பாடுகளுடன் கம்பீரத் தோற்றத்தோடு, 108 அடியில் நிமிர்ந்த நடையில் இராஜகோபுரத்துடன் ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோவில் அமைந்துள்ளது.

## கோவிலும் வரலாறும்

இலங்கை திருநாட்டில் சைவம் தளைத்தோங்கும் வகையில், தன்னிகரில்லாக் கோவிலாகத் திகழும் கோவில்களில், மாத்தளை ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோவிலும் ஒன்றாகும். பஞ்ச இரதங்களைக் கொண்டுள்ள ஒரே ஒரு கோவில் இதுவாகும்.இதுவே, இலங்கையின் மிக உயரமாக 108 அடிகள் இராஜகோபுரத்தைக் கொண்ட கோவிலாகும்.

இக்கோவிலில் ஆரம்ப காலத்தில் பூஜைகள் மட்டுமே இடம்பெற்று வந்துள்ளன. பின்னர் படிப்படியாக திருவிழாக்களும் சப்பறத்தேர் எடுக்கும் வழக்கமும் இருந்தது. 1934ஆம் ஆண்டு சப்பறத்தை மாற்றி, விநாயகருக்கும் சிவனம்பாளுக்கும் முருகனுக்கும் இரதோற்சவம் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

1955ஆம் ஆண்டளவில் இராஜகோபுரம் உட்பட பல அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ளப்பட்டன. பொதுமக்களின் உதவியுடன் கோவிலின் மகா மண்டபம், முருகன் கோவில் வசந்த மண்டபம், விஷ்ணு கோவில், நாயன்மார் கோவில், மீனாட்சி சிவன் ஆகிய கோவில்கள் உருவாக்கப்பட்டன.



ஸ்ரீ முத்துமாரி அம்பாளுக்கு சந்தன மரத்தில் சித்திரதேர் செய்யப்பட்டு 1974 ஆம் ஆண்டு வெள்ளோட்டம் விடப்பட்டது.

1983ஆம் ஆண்டு, இனக்கலவரத்தின் போது சில விசமிகளால் சித்திரத்தேர் உட்பட அனைத்து தேர்களும் எரியூட்டப்பட்டன. 1992ஆம் ஆண்டளவில் புதிய சித்திரத் தேரையும் ஏனைய தேர்களையும் செய்யும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு, வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டது. இக்கோவிலில் அமைந்துள்ள 108 அடி உயரமுள்ள இராஜகோபுரம், இந்துக்களின் ஒற்றுமையையும் திருப்பணியின் வளர்ச்சியையும் காட்டி நிற்கின்றது.

## மூர்த்தி, தீர்த்தம், தலவிருட்சம்

கருவறையில் திவ்ய சிம்மாசனத்தில் அம்பாள் அமர்ந்து நாடிவரும் பக்தர்களுக்கு அருளாசி வழங்குகிறாள். தீர்த்தமாக கோவில் தீர்த்தக்கேணி அமைக்கப்பட்டுள்ளது.கோவிலின் தலவிருட்சம், பல வருடங்களாக கோவிலுக்குள்ளே மிகவும் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளது.



குறிப்பு: மாசி மஹோற்சவம், அலங்கரிக்கப்பட்ட பஞ்ச ரதங்கள் பக்கத்தர்களின் அரோஹராராவுக்கு மத்தியில், நாட்டின் பல பாகங்களில் இருந்தும் வருகைதரும் பக்தர்கள், வடம்பிடித்து இழுக்க வெளிவீதிஉலா வரும் கண்கொள்ளாக் காட்சியை, இம்முறை பலருக்கும் நேரடியாகக் காணக்கிடைக்காது. கொரோனா தொற்றின் காரணமாக, பிறப்பிக்கப்பட்ட சுகாதார வழிமுறைகள், இம்முறை கடுமையாகப் பின்பற்றப்படுவதாக மாத்தளை கோவில் நிர்வாகம் அறிவித்துள்ளது.

## கிரியாகால நிகழ்வுகள்

2022.01.26 கொடியேற்றம் நடைபெற்றது.

2022.02.16 முற்பகல் 10 மணிக்கு ஸ்ரீ சிவனடியார் திருவிழாவும் வசந்த மண்டப பூஜையும் அன்றிரவு திருச்சூரக திருவேட்டை திருவிழாவும் நடைபெறும்.

2022.02.17 காலை 8 மணிக்கு இரதோற்சவ வசந்த மண்டப பூஜை நடைபெறும்

2022.02 18 மாலை 7 மணிக்கு கற்பூர திருவிழா நடைபெறும்.

2022.02.19 காலை 8 மணிக்கு பாலாபிஷேகத்தினை தொடர்ந்து காலை 10 மணிக்கு தீரத்தோற்சவமும் மாலை 7 மணிக்கு கொடியிறக்கமும் நடைபெறும்.

2022.02.20 முற்பகல் 11 மணிக்கு சண்டேஸ்வரி உற்சவமும் மாலை ஆறு மணிக்கு பூங்காவன உற்சவமும் நடைபெறும்.

2022.02.22 இரவு வைரவர் பூஜை நடைபெறும்.



## திருவிழாக்கள்

கோவிலில் பல்வேறு திருவிழாக்கள் நடைபெற்று, இந்து சமயத்தின் பாரம்பரியங்களையும் கலை கலாசாரங்களையும் தத்துவங்களையும் பேணிப்பாதுகாத்து வருகின்றது. அந்தவகையில், ஆடிப்பெருந்திருவிழா, தைமாத பிரம்மோற்சவம், மாசிமகம், நவராத்திரி, பௌர்ணமி செவ்வாய் என்பன மிக விசேடமாகவும் மகாசிவராத்திரி, குடமுழுக்கு பூஜைகள், விளக்கு பூஜைகள், ஐயப்ப பூஜைகள் என்பனவும் சிறப்பாகவும் நடைபெற்று வருகின்றன. அத்தோடு, வெள்ளிக்கிழமை, செவ்வாய்க்கிழமை போன்ற விசேட தினங்களில், அம்பாளுக்கு சிறப்பு அபிஷேக ஆராதனைகள் இடம்பெறுகின்றன. இக்காலங்களில் பக்தர்களின் கூட்டம் கடலென (தமிழ், சிங்களம்) திரண்டு, அம்பாளின் அருளாசிக்கு அலைமோதுவது விசேட அம்சமாகும்.



## கோவிலின் சமூகப்பணி

இக்கோவிலின் ஊடாக இன்னோரன்ன சமூகப்பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இவற்றின் மூலம், பிரதேச வாழ் மக்கள், அபிவிருத்தி காண்பது வெட்டவெளிச்சமாகும். அந்தவகையில், ஞாயிற்றுக்கிழமைகளில் நடைபெறும் அறநெறி வகுப்புகள் மூலம், மாணவர்களுக்கு இந்து தர்மம் தொடர்பான விழிப்புணர்வுகளை ஏற்படுத்தும் நிகழ்ச்சித் திட்டங்கள், கலைத்துறையை மேம்படுத்துவதற்காக கலைப்போட்டிகளை நடத்துதல், வறிய மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்களை பெற்றுக்கொடுத்தல் போன்ற பல பணிகளை முன்னெடுத்து வருகின்றது.





# உன் பாதம் சரணடைந்தோம் முத்துமாரி...

மாசியில் மனங் குளிர்வோம்-முத்து
மாரி உந்தன் அருளாலே
உன் பாதம் சரணடைந்தோம்
உத்தமியே வருவாளே...

தேரேறி வருவதென்ன
தெம்மாங்கு பாட்டுடனே
வீறு நடைபோட்டு நீயும்
வீதியுலா வருவதென்ன...

பஞ்சரதம் நீயேறி
பாவங்கள் போக்கிடவே..
வந்தெம்மை அணைத்திடம்மா
உலக முத்துமாரியே...

மத்திய மலை நாட்டிலே
மாத்தளை மா நகரிலே
மாரி உன்னை நாடி வந்தோம்
அருள் பெறத் தானம்மா...

திவ்ய சிம்மாசனத்தில்
ஒய்யாரமாய் வீற்றிருப்பாய்
திருவிழாக் காலங்களில்
திருக்காட்சி அவள் தருவாள்...

பட்டாடை உடுத்தி-அவள்
பவனி வரும் வேளையிலே
பக்தர்களெல்லாம் கூடி
பாமாலை பாடுதம்மமா...

ஒளி தரும் தேரினிலே-அவள்
ஒய்யாரமாய் ஒளிதருவாள்
பாவங்கள் போக்கியவள்
பரிசுத்தம்தான் தருவாள்...

பண்ணாகம பகுதியிலே
கண்ணே எழுந்தருளி
உன் புகழ் பாடுகின்றோம்
கொங்கு மலர் தூவி...


ஆத்தா உன் அருளாலே
பெயர் புகழ் பெற்றோமே-உன்னை
பார்த்தாலே போதுமம்மா
பாவங்கள் ஓடுதம்மா...

பிள்ளை வரம் வேண்டி
பிணிகள் பல தீர-உன் பாதம்
சரணடைந்தோம் உத்தமியே
அருளம்மா...

வாருங்கள் வடம் பிடிப்போம்
வடிவாம்பிங்கையின் அருள்
வடம்பிடிப்போம்.....

ஜயகுமார் ஷான்









# நவம் பெரஹரா

கொழும்பு-02, கங்காராமை விஹாரையின் நவம் பெரஹரா, நேற்று (16) வெகு விமரிசையாக நடைபெற்றது. முதல்நாள் பெரஹரா, நேற்றுமுன்தினம் (15) இரவு வீதிஉலா வந்தது. பிரதமர் மஹிந்த ராஜபக்‌ஷ, அமைச்சர்களான சமல் ராஜபக்‌ஷ, பந்துல குணவர்தன, நாமல் ராஜபக்‌ஷ, ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க எம்.பி ஆகியோர் பங்கேற்றிருந்தனர்.

(படங்கள்: பிரதீப் பத்திரண)























விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டால் வியாழக்கிழமை, 17 பெப்ரவரி 2022, இல. 08, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.